பக்கங்கள் : 14+கல்விச்சுடர்

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 21 செவ்வாய்க்கிழமை (04.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :128

### ஜெனீவா அமைதிப் பேச்சுக்கு

# கட்டுநாயக்காவுக்குப் பதிலாக கடல் விமானம் மூலம் பயணம்

## பாதுகாப்புக் கருதி விடுதலைப் புலிகள் முன்வைக்கும் மாற்று யோசனை

கொழும்பு, ஏப்ரல்4

**ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் அடுத்த சுற்றுப் பேச்சுகளில் பங்குபற்றும் விடுதலைப் புலிகளின் உயர்மட்டப் பிரதிநிதிகள் குழு, கட்டுநாயக்கா ஊடாக ஜெனீவா செல்வதற்கான பயணப் பாதுகாப்பு உத்தரவாதத்தை இலங்கை அரசுத் தரப்பும், ஜனாதிபதியும், நோர்வே அனுசரணைத் தரப்பும் தர முடியாவிட்டால் -**

**பேச்சில் பங்குபற்றும் விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்கள் வன்னியிலிருந்து நேரடியாக கடல் விமானம் மூலம் புறப்படுவதற்கான திட்டம் குறித்து பரிசீலிக்கும்படி மாற்றுயோசனை ஒன்று விடுதலைப் புலிகள் தரப்பினால் முன்வைக்கப்பட்டிருப்பதாக நம்பகரமாகத் தெரியவருகிறது.**

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சியில் நோர்வே வகிக்கும் அனுசரணைப் பணிக்குப் பொறுப்பான அந்நாட்டு அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் கடந்த 29ஆம் திகதி லண்டனில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்திருந்தார்.

இச்சமயம், எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரை ஜெனீவாவில் நடைபெறும் அமைதிப் பேச்சுகளில் பங்குபற்றுவதற்காக வன்னியிலிருந்து செல்லும் புலிகளின் உயர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மன்மோகன்சிங்குட
## ரணில் இன்று சந்தி

கொழும்

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ
மேற்கொண்டுள்ள ஐக்கிய தேசியக்
தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான
விக்கிரமசிங்க இன்று இந்தியப் பிரத
மோகன்சிங்கை சந்தித்துப் பேசுவார்.

இந்தியாவின் முன்னாள் பிரதம
ரால், வெளிவிவகாரச் செயலர் சியாம்
ஆகியோரையும் ரணில் இன்று சந்திப்பா

முன்னதாக நேற்றிரவு காங்கிரஸ் தலை
சோனியா காந்தியை ஐ.தே.க. தலைவர் சந்தித்
தார். அப்போது இலங்கையின் அரசியல் நிலைமை குறித்தும், உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் இலங்கை அரசியலில் ஏற்பட்டிருக்கும் திருப்பம் குறித்தும் ஐ.தே.க. தலைவர் இந்தப் பேச்சுகளின் போது விளக்கிக்கூறினார். (எ-க)

### நாளைய கல்விச்சுடரில்

**இரசாயனவியல் வினாத்தாள், இணைந்த கணிதம் II விடைக்குறிப்புகள்.**

## கடத்தப்பட்ட பணியாளரை விடுவிக்கக் கோரி வட - கிழக்கில் முன்பள்ளிகள் இன்று பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.4

கடந்த ஜனவரி மாதம் கடத்தப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் கா.கணேசலிங்கம் மற்றும் 6 பணியாளர்களை விடுவிக்கக்கோரி இன்று செவ்வாய்க்கிழமை வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள சகல முன்பள்ளிகளையும் இடைநிறுத்தி பகிஷ்கரிப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## வந்தார் போவர்!

கொழும்பு, ஏப்.4



நேற்றுக்காலை இலங்கை வந்தடைந்த அமைதி முயற்சிகளுக்கான நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹன்ஸன் போவர், நேற்று மாலை அமைதிப் பேச்சுகளுக்கான அரச குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜோன் குணரட்ன ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

அமைதி முயற்சிகளின் தற்போதைய நிலை குறித்து இந்தப் பேச்சுகளின் போது விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது.(14ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தில் முஸ்லிம் படையணி தேவையற்ற ஏற்பாட்டு நடவடிக்கை

### அகில இலங்கை முஸ்லிம் சபை தெரிவிப்பு

"இலங்கை இராணுவத்தில் தனி முஸ்லிம் படையணி ஒன்றை தோற்றுவிக்க முனைவது தேவையற்ற ஒரு நடவடிக்கையாகும்."

- இவ்வாறு அகில இலங்கை முஸ்லிம் சபை தெரிவித்துள்ளது என இணையத்தளம் ஒன்று தகவல் தெரிவித்துள்ளது.

மேற்படி அமைப்பின் செயலர் எம்.எப். மொகைதீன் இந்தக் கருத்தை வலியுறுத்தி ஜனாதிபதி மஹிந்தவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

(14ஆம் பக்கம் பார்க்க)

## விமல் வீரவன்ஸ நேற்று ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு,ஏப்.4

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும், ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸவிற்குமிடையிலான முக்கியமான சந்திப்பொன்று நேற்றுக் காலை அலரி மாளிகையில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் குறித்து இருவரும் நீண்ட நேரம் கலந்துரையாடியிருக்கின்றனர். நாடாளுமன்றத் தேர்தலொன்று குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டதாகத் தெரிகின்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இத்தேர்தலில் தோல்வி ஐ.தே.கவுக்கே; ஜே.வி.பிக்கு அல்ல என்கிறது அக்கட்சி

### நேற்று செய்தியாளர் மாநாட்டில் ரில்வின் சில்வா விளக்கம்

கொழும்பு,ஏப்.4

ஏராளமான உள்ளூராட்சி மன்றங்களை வைத்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி அவற்றை இழந்ததையே இந்தத் தேர்தலில் தோல்வியாகக் கருதவேண்டும். ஆனால், ஜே.வி.பியோ கூடுதலான வாக்குகளைப் பெற்று நாட்டின் தலைவரது தேர்தல் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றமொன்றைத் தன்வசம் வைத்திருக்கின்றது. இது ஜே.வி.பிக்கு கிடைத்த வெற்றி

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ்மா அதிபரை பதவி நீக்க உயர்மட்டங்கள் ஆலோசனை

பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவை பதவி நீக்குவது தொடர்பான உயர்மட்ட ஆலோசனைகள் தற்பொழுது இடம்பெற்று வருவதாக தகவல் வெளிவந்துள்ளது என இணையத்தளச் செய்தியொன்று தெரிவிக்கிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னர் பிரதமராகப் பதவிவகித்த காலத்தில் அவருக்கு எதிராகத் தொடரப்பட்ட "அம்பாந்தோட்டை நிதி மோசடி" வழக்கில் ஒரு லட்சம் ரூபாவை நஷ்டமாக பொலீஸ்மா அதிபர் சந்திராபெர்னாண்டோவும் வழங்க வேண்டும் என உயர்நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பொன்றை வழங்கியிருந்தது.

இந்தத் தீர்ப்பையடுத்து விசாரணைக்குள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசியம் அற்ற இரண்டு மின்குமிழ்களை தினமும் அணைத்தால் மின்வெட்டை தவிர்க்கலாம்!

### மின்சார சபையின் பிரதி முகாமையாளர் பாவனையாளர்களுக்கு ஆலோசனை

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ். குடாநாட்டில் தற்போது மின்பாவனை அதிகரித்திருக்கிறது. அதனால்தான் இரவில் மின்தடை ஏற்படுகிறது. இவ்வேளையில் பாவனையாளர்கள் அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்காகப் பாவிக்கும் மின் குமிழ்களில் ஆகக்குறைந்தது இரண்டையேனும் அணைத்து ஒத்துழைப்பு வழங்கினால் மின்தடையைத் தவிர்த்துக்கொள்ளமுடியும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இலங்கை மின்சார சபையின் வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் சண்முகராஜா.

குடாநாட்டில் தற்போது முன்னிரவு வேளைகளில் மின்தடை ஏற்படுகின்றது. இந்த மின் தடைக்கான காரணங்கள் குறித்து நேற்றுமாலை ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தார் பிரதிப் பொதுமுகாமையாளர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இன்று ஆர்ப்பாட்டம்

வவுனியா,ஏப்.4

ஒட்டுக் குழுவினரால் கடந்த ஜனவரியில் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரை விடுவிக்கக் கோரி இன்று வவுனியாவில் மூவின மக்களும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துகின்றனர்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் முன்பள்ளிகளின் ஆசிரியைகள், மாணவர்கள், பெற்றோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள உள்ளனர். (எ-க)



கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரிக் கிளைத் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரமுகர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வங்கியின் இலங்கைக்கான முகாமைத்துவப் பணிப்பாளர் அமித்த குணரட்ணவுக்கு பூச்செண்டு வழங்கி வங்கி ஊழியர்கள் வரவேற்பதையும் வாடிக்கையாளரின் புதிய கணக்கை பிரதம விருந்தினர் ஆரம்பித்து வைப்பதையும் வைபவத்தில் கலந்துகொண்ட பிரமுகர்களையும் புதிய கிளைக் கட்டடத்தை முறையே இடமிருந்து வலமாகப் படங்களில் காணலாம். (செய்தி 3 ஆம் பக்கத்தில்) (படங்கள்: ஒளிஅதிரன்)

# ...ாரைநகரில் கடற்படை சுவீகரித்த ...ணிகளின் உரிமையாளர்களுக்கு

...ரைநகரில் கடற்படையினரால் சுவீகரிக்...டுள்ள காணிகளுக்கான நஷ்டஈடு ...காணி உரிமையாளர்களுக்கு வழங்கு... தொடர்பாக நடத்தப்பட்டுவரும் விசா...ணைகளுக்குச் சமுகமளிக்காதவர்கள் எதிர்...ரும் 10ஆம் திகதிக்கு முன்னர் கடிதம் மூலம் ...ாழ். செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்துள்ளார்.

கடற்படையினரால் சுவீகரிக்கப்பட்ட 153 காணிகள் தொடர்பாக அவற்றின் உரிமையாளர்களிடம் செயலகத்தினரால் விசாரணை நடத்தப்பட்டுவருகின்றது.

இந்த விசாரணைகளுக்கு பெரும்பாலான காணி உரிமையாளர்கள் சமுகமளிக்கவில்லை எனவும் -

சமுகமளிக்காதவர்களையே எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளுமாறும் -

மேலதிக அரச அதிபர் கேட்டுள்ளார்.

விசாரணைக்குட்படுத்தப்படாதவர்கள் கடிதம் மூலம் தொடர்புகொள்ளுமிடத்து அவர்களை விசாரணை மேற்கொள்வதற்கான அழைப்புக் கடிதங்கள் பின்னர் அனுப்பிவைக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

(ஓ-203-202) (24)

# ரெலிகொம் சேவையில் தடங்கல்கள் நீங்கிவிட்டன என்கிறார் அதிகாரி

யாழ்பாணம்,ஏப்.4

குடாநாட்டில் ரெலிகொம் நிறுவனத்தால் வழங்கப்படும் தொலைபேசிச் சேவையில் இருந்துவந்த தடங்கல்கள் பெருமளவு நீங்கிவிட்டன என்று ரெலிகொம்நிறுவன அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு நிலையத்தில் உள்ள உபகரணங்களில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாகக் கடந்த சிலதினங்களாக குடாநாட்டில் ரெலிகொம் தொலைபேசிச் சேவைகள் இடையிடையே செயலிழந்துபோயின என்றும் இதனால் மாற்றுஏற்பாடாக வேறுமார்க்கமூடாக சேவை வழங்கப்பட்டுவந்ததாகவும் அவர் கூறினார்.

தற்போது சேவைகள் வழமைக்குத் திரும்பிவிட்டன என்றும் அவர் மேலும்தெரிவித்தார். எனினும் பரிவர்த்தனை நிலையத்தில் அடிக்கடி ஏற்படும் சிக்கல்கள் காரணமாக சிலசமயங்களில் குறிப்பிட்டசில இலக்கங்களில் தொடங்கும் தொலைபேசி இலக்கங்களைக் கொண்ட பாவனையாளர்களுக்கான சேவை தடைப்படக் கூடும் - என்றும் அவர் கூறினார்.

(ஒ-3)(30)

# கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நாளை முதல் இரு தினங்கள் முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம்,ஏப்.4

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா நாளை புதன்கிழமையும் மறுதினம் வியாழக்கிழமையும் கலாசாலையின் ரதிலக்ஷ்மி மண்டபத்தில் வீரமணி ஐயர் அரங்கில் நடைபெறவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு முதலாம் நாள் நிகழ்வுகள் முத்தமிழ் மன்றத்தின் பிரதித் தலைவர் க.யூட்சிபாகரன் தலைமையில் ஆரம்பமாகும்.

இதில் பிரதம விருந்தினராக கமநலத் திணைக்கள ஓய்வுபெற்ற கமநல உதவி ஆணையாளர் நாகலிங்கம் குழந்தைவேலு (தமிழ்க் குழந்தை) கலந்துகொள்வார்.

மங்கள விளக்கேற்றல், கடவுள் வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியவற்றைத் தொடர்ந்து முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளாரின் சிலை திறப்பு விழா இடம்பெறும். கலாசாலையின் அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆசியுரை வழங்குவார். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு முத்தமிழ் மன்றத் தலைவர் கு.உதயகுமார் தலைமையில் நடைபெறும்.

இதில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஓய்வுபெற்ற விரிவுரையாளர் கலாநிதி வே.சுப்பிரமணியம் (முல்லைமணி), கலாசாலையின் ஓய்வுபெற்ற பிரதி அதிபர் பொன். தெய்வேந்திரம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

முன்னதாக், தமிழ் பாரம்பரிய கலை நிகழ்வுகளுடன் மங்கள வாத்திய இசை முழங்க பிரதம விருந்தினர்கள் அரங்கிற்கு அழைத்து வரப்படுவார்கள்.

கலாசாலை அதிபரின் ஆசியுரையினைத் தொடர்ந்து வாழ்த்துரையினை முத்தமிழ் மன்றக் காப்பாளர் செல்வி. வி.கந்தசாமி ஐயர், சிரேஷ்ட விரிவுரையாளர் கா.கணபதிப்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து பத்திரிகை வெளியீடும், இறுவட்டு வெளியீடும் பரிசில் வழங்கல், கௌரவிப்பு என்பனவும் இடம்பெறும். தொடர்ந்து இறுதியாக வழக்காடுமன்றம், நடனவிருந்து, இசைவிருந்து, விசேட கூத்து போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (எ-13)(30)

# மே 9 இல் ஓய்வுபெறுகிறார் மகாசிவம்

காரைதீவு,ஏப்.4

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் ஆசிரியர் சேவையிலிருந்தும், சங்கத்தின் பொதுச்செயலாளர் பதவியிலிருந்தும் எதிர்வரும் மே மாதம் 9ஆம் திகதி ஓய்வுபெறுகிறார்.

சங்கத்தின் பொதுச் செயலாளராக 09.07.1979 இல் தெரிவான த.மகாசிவம் நிர்வாகிகள் சங்கத் தேர்தல்களில் தொடர்ந்து வெற்றியீட்டியதன் மூலம் 27 வருடங்கள் தொடர்ந்து அப்பதவியை வகித்துவருகிறார்

(ஓ-214)(30)

# இந்துக் கல்லூரி மாணவர் விடுதி நேற்று வைபவரீதியாகத் திறப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர் விடுதி திறப்பு விழா நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்றது.

கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் கே.எஸ். எஸ்.சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக இந்த விடுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் க.பரமேஸ்வரன் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு விடுதியைத் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(எ-14)(30)

# இலங்கை வங்கி ஆட்சேர்ப்பு: உயர்தரத்தில் விசேட சித்தி அவசியம்

யாழ்ப்பாணம்,ஏப்.4

இலங்கை வங்கியின் பயிற்சி ஆளணி உதவியாளர் பதவிக்குத் தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் மற்றும் தமிழ் அல்லது சிங்களம் ஆகிய பாடங்கள் உட்பட 5 பாடங்களில் 'சி' சித்திகளைப் பெற்றிருக்கவேண்டும். அத்துடன், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடத்திட்டமெனின் 3 'சி' சித்தியும் 4 பாடத்திட்டமெனில் 4 'சி' சித்தியும் பெற்றிருக்க வேண்டும்.

அத்துடன், விண்ணப்பதாரர் 2006 ஏப்ரல் 24ஆம் திகதியன்று 24 வயதிற்குட்பட்டவராக இருக்கவேண்டும்.

தகுதியானவர்கள் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் 'ஆளணி முகாமையாளர், இலங்கை வங்கி, 26 ஆவது மாடி, தலைமைக்காரியாலயக் கட்டடம் 4, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு-01' என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்தப் பதவி தொடர்பாக கடந்த முதலாம் திகதி உதயனில் வெளியாகி இருந்த செய்தியில் விண்ணப்பதாரிகளின் கல்வித் தகைமைகளில்தவறு ஏற்பட்டுவிட்டது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் மூன்று அல்லது நான்கு பாடங்களில் 'சி' சித்திகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பது சாதாரண சித்திகளைப் பெற்றிருக்க வேண்டும் என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. தவறுக்காக வருந்துகின்றோம். (ஐ-3-203)(30)

# தாக்குதலில் நால்வர் காயம்

வவுனியா, திருநாவற்குளம் பகுதியில் குழு ஒன்று நேற்று நடத்திய தாக்குதலில் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் நான்குபேர் படுகாயமடைந்தனர்.

கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் சென்றபோதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலின் பின்னர் வவுனியா சுகாதார அதிகாரி அலுவலகம் மீதும் மேற்படிகுழு தாக்குதல் நடத்தியது. இதனால் அலுவலகத்தின் கண்ணாடிகள் சேதமடைந்தன.

பொலீஸார் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர். விசாரணைகள் தொடர்ந்தும் நடத்தப்படுவதாக வவுனியா பொலீஸார் தெரிவித்தனர். (எ-க)






# மிதிவெடி விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு 'டெனிஸ்' நிறுவன ஊழியர்கள் இரத்ததானம்


யாழ்ப்பாணம்,ஏப்.4

மிதிவெடிச் செயற்பாட்டின் விழிப்புணர்வுக்கும், பங்களிப்புக்குமான சர்வதேச தினத்தை முன்னிட்டு டெனிஸ் கண்ணி வெடியகற்றும் நிறுவனத்தின் ஊழியர்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கிப் பிரிவுக்கு இரத்தம் வழங்கியுள்ளனர்.

இந்த இரத்ததானம் வழங்கும் நிகழ்வு கடந்த 31ஆம் திகதி இடம்பெற்றது.

டெனிஸ் கண்ணிவெடியகற்றும் நிறுவனத்தில் பணிபுரியும் 30 ஊழியர்கள் இவ்வாறு இரத்தம் வழங்கியுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்தவங்கிப் பிரிவின் வைத்திய அதிகாரி மற்றும் தாதிமார்கள் இந்த இரத்தம் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.



(எ-13)(30)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# மக்களைப் பாதுகாக்க படைகளா? படைகளைப் பாதுகாக்க மக்களா?

மக்களைப் பாதுகாக்கப் படைகளா? அல்லது படைகளைப் பாதுகாக்க மக்களா?

இந்தக் கேள்விதான் சிங்களப் படைகள் விடயத்தில் கடந்த பல தசாப்தகாலமாக தமிழ் மக்கள் மனதில் தொக்கி நின்று வருகின்றது.

அந்தக் கேள்வி - சந்தேகம்- நியாயமானதே என்பதை உறுதிப்படுத்துமாற்போல அதே விடயம் நாட்டின் உச்ச நீதிமன்றமான உயர் நீதிமன்றத்திலும் எதிரொலித்திருக்கின்றது.

தமிழர் தாயகமான வடக்கு இலங்கையில் தமிழ் மக்களின் வளம்கொழிக்கும் பெரும் நிலப்பிரதேசம் இலங்கை அரச படைகளினால் கபளீகரம் செய்யப்பட்டுள்ளது. உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் அரச துருப்புகள் மேற்கொண்ட ஆக்கிரமிப்புக் காரணமாக தமிழர்கள் தங்கள் பூர்வீக வாழிடங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டிருக்கின்றார்கள்.

யாழ். அரச அதிபர், உயர்நீதிமன்றுக்கு சமர்ப்பித்த அறிக்கையின்படி-

வலி. வடக்கில் மட்டும் 36 கிராமசேவையாளர் பிரிவுகள் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் சிக்குப்பட்டுள்ளன.15 ஆயிரத்து 482 குடும்பங்களைச் சேர்ந்த 65 ஆயிரத்து 756 பேர் இவ்வாறு அங்கிருந்து இடம்பெயர்ந்திருக்கின்றனர். வலிகாமம் வடக்கில் அரச துருப்புகளால் இவ்வாறு தமிழ் மக்களிடமிருந்து பலவந்தமாகப் பிடுங்கப்பட்ட சுமார் 60 சதுர கிலோமீற்றர் பிரதேசம் வளம் மிக்க செம்மண் நிலமாகும். வட பகுதியில் மிக உயர்ந்த உற்பத்தித்திறன் கொண்ட வளம் கொழிக்கும் பூமியே இப்படி ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கின்றது.

வடக்கில் மீன் பிடியில் வருமானம் கூடிய கடல் பகுதியும் வலிகாமம் வடக்குக் கரையோரத்தில்தான் அமைந்துள்ளது.

இப்பகுதியில் அறுபது வீதமானவர்கள் தமது மண்ணை நம்பி வாழும் விவசாயிகள். முப்பது வீதமானோர் மீனவர்கள். காலங்காலமாக - பரம்பரை பரம்பரையாக - தாம் செய்து வந்த இந்தத் தொழிலே இவர்களது ஜீவனோபாயமாகும். வாழ்வியலுக்கான இந்த உழைப்பு மறுக்கப்பட்டு பதினைந்து வருடங்களுக்கு மேலாக இவர்கள் உலர் உணவு நிவாரணத்தில் தங்கி, அகதி முகாம்களிலும் நலன்புரி நிலையங்களிலும் தஞ்சம் புகுந்து, அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றார்கள்.

யாழ். அரச அதிபர் கூறுவதுபோல, பலவந்தமாக இடம்பெயர வைக்கப்பட்ட இந்த மக்களுக்கு அரசாங்கம் வழங்கும் உலருணவு அவர்கள் தம் உயிரையும், உடலையும் ஒட்ட வைத்துக்கொண்டிருக்கவே போதுமானதாக இல்லை.

"இப்பகுதியில் இந்த மக்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வழிபாட்டுத் தலங்களும் உள்ளன. இறந்தவர்களுக்கான இறுதிக்கிரியைகளை இப்பிரதேசக் கடலோரத்தில்தான் இந்த மக்கள் நடத்துவர். அதுமட்டுமல்ல.தங்களின் மண் மீது தீராத பற்றுக் கொண்டவர்கள் இவர்கள். மாற்று இடங்களை வழங்கி, இவர்களின் இடப்பெயர்வை நிரந்தரமாக்க எடுக்கப்படும் எந்த முயற்சியும் நிலைமையைச் சிக்கலாக்கவே செய்யும்." - என்றும் யாழ். அரச அதிபர் சுட்டிக்காட்டியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

இவ்வாறு அரசப் படைகள் பொதுமக்களைப் பலவந்தமாக வெளியேற்றி, அவர்களின் நிலத்தை கபளீகரம் செய்து நிற்பது சட்டவிரோதமான ஆக்கிரமிப்பு எனக் குறிப்பிட்டு உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றை விசாரணை செய்த உயர்நீதிமன்றம் மனுதாரர்களான பாதிக்கப்பட்ட நிலச் சொந்தக்காரர்களிடம் சில சிபாரிசுகளை - யோசனைத் திட்டங்களை - முன்வைத்திருக்கிறது.

'பாதுகாப்புக்கு அதிக அச்சுறுத்தல் இல்லாத இடங்களில் மக்கள் கூட்டம் கூட்டமாக - குழுமமாக - மீளக்குடியேறலாம். அப்படி மீளக் குடியேறும் மக்கள் கூட்டம், அந்தக் குடியேற்றத்தின் மூலம் பாதுகாப்புப் படையினருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் வராது என்ற உறுதிமொழியைத் தந்த பின்னர் அந்த இடங்களுக்குக் குடிபெயரச் செல்லலாம்.' - இத்தகைய ஒரு திட்டம் குறித்து மனுதாரர்களை ஆராய்ந்து ஒரு முடிவைத் தெரிவிக்கும்படி உயர்நீதிமன்றம் சிபாரிசு செய்திருக்கின்றது.

இந்த வழிகாட்டுதல்தான், இவ்வழக்கின் இறுதித் தீர்ப்பு என்பதல்ல. இந்த சிபார்சின் அடிப்படையில் - அதை ஏற்க வைப்பதன்மூலம் - இப்பிணக்குக்கு இருதரப்பும் ஏற்கக்கூடிய இணக்கம் ஒன்றை ஏற்படுத்தலாமா என்பதுதான் உயர்நீதிமன்றத்தின் முயற்சி. அதைக் குறைகூறுவது எமது நோக்கமல்ல.

மக்களைப் பாதுகாக்க வேண்டிய பாதுகாப்புப்படைகள் மக்களை மிரட்டித் துரத்திவிட்டு அவர்களின் வீடு - வாசல்கள், வயல் - வரம்புகள், நில புலன்களை எல்லாம் ஆக்கிரமித்து நிற்க -

அந்தப் பாதுகாப்புப் படைகளின் பாதுகாப்புக்கு மக்கள் குழுமம் உத்தரவாதம் தந்துவிட்டுத் தத்தமது காணிகளில் - வீடுவாசல்களில் - வந்து குடியேறலாம் என்று கூறுவது சுத்த அபத்தமாகப் படவில்லையா?

தமக்குத் தாமே பாதுகாப்பு உத்தரவாதத்தை அளிக்க முடியாத நிலையில் இருக்கும் படைத்தரப்பு - தங்களைப் பாதுகாப்பதற்கான உத்தரவாதத்தை மக்களிடமிருந்து எதிர்பார்ப்பது கேலிக்கூத்தன்றி வேறென்ன?

# கைதடி வீதியில் மணல் அகழ்வு மக்கள் போக்குவரத்தில் சிரமம்



கைதடி, ஏப்.4

பயன்பாட்டில் உள்ள வீதியில் மண்ணை சிலர் அகழ்ந்து எடுத்துச்சென்றதால் அவ்வீதியூடாகப் பயணிப்பவர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கைதடி ஊற்றல் மயானத்திற்குச் செல்லும் மூத்தானம் புலம் வீதியிலிருந்தே மண் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாக இருந்து வந்தது. இதனால், சிரமங்களை எதிர்கொண்ட இப்பகுதிமக்கள் வீதியைச் செப்பனிடுமாறு சாவகச்சேரி பிரதேசசபையிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். நிதி வசதி இல்லாத நிலையிலும் இவ்வீதியை விரைவில் திருத்தித் தருவதாகப் பிரதேச சபை உறுதியளித்திருந்தது.

இந்நிலையில் இப்பிரதேசத்திற்கு அண்மையாகவுள்ள இடமொன்றில் பொதுக்கட்டடம் ஒன்று அண்மையில் நிர்மாணிக்கப்பட்டது. அக்கட்டடத்தின் அத்திவாரத்திற்கு இடுவதற்காக இவ்வீதியின் நடுவே இரண்டு அடி ஆழத்திற்கு மண் அகழப்பட்டு இருபது தடவைகளுக்கு மேல் உழவு இயந்திரத்தில் ஏற்றி எடுத்துச்செல்லப்பட்டது.

இப்பகுதியில் மண் அகழ வேண்டாம் எனப் பொதுமக்கள் எதிர்ப்பைத் தெரிவித்தபோதும் அதனைக் கவனத்தில் கொள்ளாது மண் ஏற்றிச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. மண்ணை ஏற்றியவர்கள் வீதியை மீளச் செப்பனிடாது அப்படியே விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

தற்போது இவ் வீதியூடாகக் கனரக வாகனங்கள் செல்ல முடியாதவாறு மிகவும் சேதமடைந்து காணப்படுகின்றது.

அத்துடன், இரவுவேளைகளில் சைக்கிளில் செல்வோரும், கால் நடையாகச் செல்வோரும் வீழ்ந்து எழுவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

இப்பகுதியில் பாலர் பாடசாலை ஒன்றும் இருப்பதனால் அங்கு கல்வி பயிலும் சிறுவர்களும் இவ்வீதியூடாகச் செல்லும் போது வீழ்ந்து காயமடைய நேரிடுகிறது.

எனவே, சம்பந்தப்பட்டோர் உடனடியாக இவ்வீதியைத் திருத்த நடவடிக்கை எடுப்பதோடு இனிவரும் காலங்களில் இவ்வாறான வீதிகளில் முறைகேடாக மண் அகழ்வதை தடுத்து நிறுத்தவேண்டும் எனவும் பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஓ-75) (27)

# கொமர்ஷல் வங்கிக் கிளை அலுவலகம் சாவகச்சேரியில் வைபவரீதியாக திறப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.4

கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரிக்கிளை நேற்றுக்காலை வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது. வங்கியின் இலங்கைக்கான முகாமைத்துவப் பணிப்பாளர் அமித்த குணரட்ண நாடாவை வெட்டி வங்கிக் கிளையைத் திறந்து வைத்தார்.

முன்னதாக பிரமுகர்கள் சாவகச்சேரி நகரப் பகுதியிலிருந்து மேள தாளத்துடன் வங்கிக் கட்டடம்வரை ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். அங்கு வங்கிப் பணியாளர்கள் பூச்செண்டுகள் வழங்கி அவர்களை வரவேற்றனர்.

அதன்பின்னர் இடம்பெற்ற திறப்பு விழாவை கொமர்ஷல் வங்கியின் வடக்கு-கிழக்குப் பிராந்திய முகாமையாளர் செல்வராஜா சூரிய மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார். அவரைத் தொடர்ந்து பிரமுகர்கள் மங்கள விளக்கேற்றினர்.

சாவகச்சேரி கிளை முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கொமர்ஷல் வங்கியின் இலங்கைக்கான முகாமைத்துவப் பணிப்பாளர் அமித்த குணரட்ண நாடாவை வெட்டி கிளை அலுவலகத்தைத் திறந்துவைத்தார். அத்துடன், புதிய வங்கிக் கணக்குகளை அவர் சம்பிரதாயபூர்வமாக வாடிக்கையாளர்களுக்கு அவர் தொடக்கிவைத்தார்.

இந்த நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் கொழும்பு சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் ரவிடயஸ், செயலாற்றுப் பிரதிப் பொதுமுகாமையாளர் சனத் பண்டாரநாயக்கா, மனித வளப் பிரதிப் பொது முகாமையாளர் சித்திரால் அமரஸ்ரீ, பரிசோதனைப் பிரிவு பிரதிப் பொது முகாமையாளர் டிலீப் பெர்னாண்டோ, சர்வதேச வர்த்தக உதவிப் பொது முகாமையாளர் ஜெகன் பெரேரா, உதவிப் பொதுமுகாமையாளர் நிமால் லக்ஸ்மன் மற்றும் கொமர்ஷல் வங்கிக் கிளையின் முகாமையாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரியில் திறக்கப்பட்டிருக்கும் கொமர்ஷல் வங்கிக் கிளையில் வாடிக்கையாளர்கள் நாடு முழுவதும் உள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைகள், வாடிக்கையாளர் சேவை நிலையங்கள் ஆகிய வலை அமைப்புகளின் உதவியுடன் கணக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

(ஒ-7-14)(33)

**நாளை**

பங்குனி 22
புதன்கிழமை
05.04.2006
திதி : ஸப்தமி
முற்பகல் 09.30
நட்சத்திரம் : திருவாதிரை
பிற்பகல் : 06.21
சுபநேரம் : 04.39 - 06.09
ராகுகாலம் : 12.09 - 01.39
(யாவும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

எந்த நூலின் மூலம் நீ அதிகம் பயன்பெறுகிறாய் என்றால் உன்னை அதிகமாக சிந்திக்கவைக்கும் நூலாகத்தான் அது இருக்கும். - ர்-பாக்கர்.

# நீர், சுகாதாரப் பிரச்சினை: அமைச்சுகளுடன் பேசுவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ். மாவட்டத்தின் குடிதண்ணீர், சுகாதார வசதிகள், வடிகால் மற்றும் நீர்ப்பாசனம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து உரிய அமைச்சுகளுடன் கலந்துரையாடுவதற்கு யாழ். அரசஅதிபர் கே.கணேஷ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களும் குடிதண்ணீர், சுகாதார வசதிகள், வடிகால்கள், நீர்ப்பாசனம் ஆகிய துறைகளின் தற்போதைய நிலை எதிர்வரும் காலங்களில் செய்யப்படவேண்டிய அபிவிருத்தி, சீரமைத்தல் அடங்கிய அறிக்கையை உடன் அனுப்பி வைக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

மேற்படி நீர், சுகாதாரவசதிகள், வடிகால், நீர்ப்பாசனம் தொடர்பாக புனரமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கவனத்திற்கும் கொண்டுவரப்படவுள்ளதாக மேலதிக அரசஅதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்துள்ளார். (த-185)(3)



137வது மைல்கல்




வெப்பம் நிறைந்த காலநிலை. உலர்ந்த மணல் சேர்ந்த மண்வளம். அதனால், தென்னை, மா, வெங்காயம், நெற்செய்கைக்கு ஏற்ற நிலமான யாழ்ப்பாணம், இங்கு வாழ்வோரின் பொருளாதாரத்தையும், வாழ்க்கைப் பின்னணியையும் உயர்த்த, அயராத முயற்சி செய்து வருகிறார்கள்.

இலங்கையில், வங்கித்துறையின் தேவையானது அகன்று செல்வதனால், வாடிக்கையாளரின் பணம் சார்ந்த பற்பல தேவைகளும் அதிகரித்துள்ளது. இவ்வாறு யாழ் வாழ் மக்களின் நிதித்தேவையும் அதிகரித்துள்ளது. எனவே, கொமர்ஷல் வங்கியின் சேவை மென்மேலும் தேவைப்படுகிறது. 1930 காலப்பகுதியில் இருந்து வரலாற்றைக் கொண்டுள்ள கொமர்ஷல் வங்கிக்கு தோள் கொடுத்து உதவுவதற்காகவும், தேவைகளை நிறைவேற்றும் செயற்றிறனை அதிகரிக்கவும், கூடுதலான மக்கள் சேவையை வழங்கவும் கொமர்ஷல் வங்கியின் புதிய சேவை நிலையம் யாழ் நகரில் இல.62/6, ஸ்டான்லி வீதியில் திறந்து வைக்கப்படுகிறது.

ஸ்டான்லி வீதி, இலக்கம் 62/6 இல் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கியின் இந்தச் சேவை நிலையம், 2006 ஏப்ரல் மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்கிழமை காலை 09.00 மணிக்கு சுபவேளையில் திறந்து வைக்கப்படும். இதில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கிறோம்.

தொலைபேசி (முகாமையாளர்) 021-2229820 (பொது) 021-2229821 (தொலைநகல்) 021-2229825

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

# ஆண்டிப்பட்டியில் ஜெயலலிதாவை எதிர்த்து நிற்கும் தி. மு. க. சீமான்

தேர்தல் களத்தில் குதிக்கும் ஒரு ரியூசன் மாஸ்ரர்



நேற்று வரை ரியூசன் மாணவர்கள் மட்டுமே அறிந்திருந்த அந்த தாடிக்காரர் மீது தமிழகத்தின் ஒட்டுமொத்த கவனமும் திரும்பி உள்ளது. ஆண்டிப்பட்டியில் முதல்வர் ஜெயலலிதாவை எதிர்த்துப் போட்டியிடும் சீமான் தான் அவர்.

பேச்சில் தன்னம்பிக்கை, பார்வையில் தெளிவு, முகத்தில் மலர்ச்சி. மொத்தத்தில் பலமிக்க ஜெயலலிதாவை எதிர்த்து நிற்கிறோமே என்ற பதற்றம் சிறிதும் இல்லாமல் மிக இயல்புடன் இருக்கிறார். இன்னும் சொல்லப்போனால் அவரது பேச்சில் மிகுந்த உற்சாகம் காணப்படுகிறது. தொலைபேசியில் தொடர்புகொண்டால் அவர் பேசும் முதல் வார்த்தை 'கலைஞர் வாழ்க' என்பதுதான்.

சீமானுக்கு சொந்த ஊர் கம்பம். எம்.ஏ. பட்டதாரி (அரசியல் விஞ்ஞானம்) படித்துவிட்டு வேலை இல்லாமல் இருந்தபோது ரியூசன் ஆரம்பிக்கலாம் என்ற எண்ணம் வந்தது. இதையடுத்து கம்பம்,பாளையம், சின்னமனூர், தேவராம் ஆகிய இடங்களில் கல்வி நிறுவனங்களை ஆரம்பித்தார்.

இவருடைய ரியூசன் வகுப்பில் தேர்வு எழுதிய யாரும் 'பெயில்' ஆனது இல்லை என்பது இவரது முயற்சிகளுக்கு கிடைத்திருக்கும் சிறப்பு. ரியூசனில் தொடர்ந்து வெற்றியை மட்டுமே பார்த்து வரும் இவர், ஆண்டிப்பட்டித் தேர்தலிலும் வெற்றிதான் கிடைக்கும் என்று நம்புகிறார்.

50 வயதானாலும் மிகவும் இளமையாகத் தெரிகிறார். 25 ஆண்டுகளாக தி.மு.க. உறுப்பினர். கஜினி முகமது போல இதற்கு முன்னர் 12முறை டிக்கெட் கேட்டு 13 ஆவது முறையாகவே டிக்கெட் கிடைத்தது. அதுவும் மிக போட்டியான தொகுதியான ஆண்டிப்பட்டி கிடைத்துள்ளது. ஜெயலலிதாவை எதிர்த்து நிற்கிறீர்கள் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளதா? என்று கேட்டபோது,

''என்ன சார் அப்படிகேட்கிறீர்கள். நான் ஜெயித்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஜெயலலிதா தோற்றுக்கொண்டே இருக்கிறார்'' இந்த வார்த்தை அவரது உள்மனதில் இருந்து வந்ததை உணர முடிந்தது. ஒவ்வொரு வாக்குச்சாவடி வாரியாக நாங்கள் கணக்கெடுத்து வருகிறோம். அ.தி.மு.கவுக்கு எத்தனை வாக்கு தி.மு.கவுக்கு எத்தனை வாக்கு. கட்சிகளை மீறி எனது சொந்தக்காரர்கள் எத்தனை பேர் என்று கணக்கெடுத்துவிட்டோம். அந்த நம்பிக்கையில்தான் சொல்கிறேன் நான் ஜெயித்துக்கொண்டே இருக்கிறேன் - என்றார் சீமான்.

(நன்றி: தினமணி) (27)

## பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு 10 பேர் பலி!

பாகிஸ்தானின் தென்மேற்குப் பகுதியிலுள்ள பலுசிஸ்தான் மாகானத்தின் பழங்குடியின தீவிரவாதிகள் வைத்த குண்டுவெடித்து 10பேர் பலியானார்கள். 13இற்கும் மேற்பட்டோர் காயமுற்றனர்.

குவெட்டாவிலிருந்து 300 கிலோமீற்றர் தொலைவில் அமைந்திருக்கும் கொலு நகரில் இக்குண்டுவெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது.

பலுசிஸ்தான் மாகாணத்தில் இராணுவத்தின் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவரக்கோரி எதிர்க்கட்சியினரும், பழங்குடியின தீவிரவாதிகளும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இக்குண்டுவெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.(ஐ)(27)

## ஆசிய நாட்டவரை வேலைக்கு அமர்த்தும் விசா திட்டத்துக்கு அமெரிக்காவில் எதிர்ப்பு

உலக அரங்கில்

வாஷிங்ரன்,ஏப்.4

இந்தியர்கள், சீனர்கள் உட்பட்ட ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களை வேலைக்கு அமர்த்தும் 'எச் - 1 பி' விசா திட்டத்துக்கு அமெரிக்காவில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

'எச்-1 பி விசா' திட்டம் 1990இல் ஆரம்பிக்கப்பட்டது. வெளிநாட்டு விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் அமெரிக்காவில் 6 ஆண்டுகள் வரை வேலை பார்க்க இத்திட்டம் அனுமதிக்கிறது. 6ஆவது ஆண்டு முடிவதற்குள் அவர்கள் நிரந்தர அமெரிக்கக் குடியுரிமை பெற வேண்டும் அல்லது தாயகம் திரும்பவேண்டும்.

உலகின் சிறந்த பணியாளர்களை அழைத்து வந்து வேலையில் அமர்த்துவது, போட்டியிடும் திறனில் அமெரிக்கா தொடர்ந்து முன்னிலையில் இருக்க உதவும் என்பதால், அமெரிக்க உயர்தொழில்நுட்ப நிறுவனங்கள் மத்தியில் இத்திட்டம் பெரும் வரவேற்பு பெற்றுள்ளது.

அதே வேளையில் இத்திட்டத்தால், அமெரிக்கர்களின் வேலைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அங்குள்ள சில அரசியல்வாதிகளும், குழுவினரும் எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர்.

எந்த நோக்கத்துக்காக இந்த விசா திட்டம் கொண்டு வரப்பட்டதோ அதற்கேற்ப இது செயற்படவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.

(ஐ)(33)


## பலத்த பாதுகாப்பின் மத்தியில் அஸாமில் தேர்தல் வாக்களிப்பு!

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் மொத்தம் 126 சட்டப் பேரவைத் தொகுதிகளில் முதல் கட்டமாக 65 தொகுதிகளில் நேற்றுக்காலை பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஆரம்பமாகியது.

முதல் கட்டத் தேர்தலில் 545 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இவர்களில் 505 பேர் ஆண்கள், 40பேர் பெண்கள், இந்தத் தேர்தலில் பா.ஜ.கட்சி அதிகபட்சமாக 65 வேட்பாளர்களைக் களத்தில் நிறுத்தியுள்ளது. காங்கிரஸ் கட்சியில் 54 , அசாம் கணபரிஷத் 54, தேசியவாத காங்கிரஸ் 25, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தலா 8 பேரும் போட்டியிடுகின்றனர்.

அஸாமில் தற்பொழுது காங்கிரஸ் கட்சியே ஆளும் கட்சியாக இருந்தபோதிலும் மாநிலக் கட்சியொன்றும் எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாவும் காங்கிரஸிற்குப் பலத்த சவாலாக இருந்து வருகின்றன.

இந்தியாவில் 5 மாநிலங்களுக்குச் சட்டசபைத் தேர்தல்கள் ஏப்ரல், மே மாதங்களில் நடைபெறவிருக்கின்றன. (ப) (24)



தமிழ்நாடு கடலூர் தபால் தலைமை அலுவலகம் அருகே முதல்வர் ஜெயலலிதா பிரசாரம் செய்வதற்கு முன்பாக அங்கு கூடியிருந்த மக்களை மகிழ்விக்க நடந்த கலை நிகழ்ச்சியில் எம்.ஜி.ஆர்.வேடமிட்டவர் பத்திரிகையாளர்களிடம் பேட்டி கொடுத்த காட்சி.

## நீருக்குள் செலுத்தும் ஏவுகணை ஈரான் வெற்றிகரமாகச் சோதனை

தெஹ்ரான்,ஏப்.4

'ராடர்' கண்காணிப்புகளுக்கும் 'டிமிக்கி' கொடுத்துவிட்டு எதிரி நீர்மூழ்கிகளை அச்சொட்டாகத் தகர்க்கக்கூடிய - நீருக்கடியில் செலுத்தக் கூடியதான - ஏவுகணை ஒன்றை ஈரான் வெற்றிகரமாகச் செலுத்தியுள்ளது.

இந்த ஏவுகணை செலுத்தப்படுவதும், குடாக்கடலில் கைவிடப்பட்ட கப்பல் ஒன்றை அது தாக்கி அழிக்கின்ற காட்சியும் ஈரான் தொலைக்காட்சியின் வழமையான நிகழ்ச்சிகள் இடைநிறுத்தப்பட்டு காட்டப்பட்டன. நீருக்கடியில் செலுத்தப்படும் உலகிலேயே மிக வேகமான ஏவுகணை இது என்று ஈரான் தெரிவித்துள்ளது.

பன்முக போர் ஆயுதங்களை காவிச்செல்லக்கூடிய மரபு ரீதியிலான ஏவுகணையொன்றை ஈரான் சோதித்துள்ள இரண்டு நாள்களுக்குள் இப்புதிய சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

ஈரானின் அணுவாயுத ஆசைகள் தொடர்பாக உருவாகியுள்ள சர்வதேச நெருக்கடி நிலைகளுக்கிடையில் இந்த இரண்டு ஏவுகணை செலுத்தும் நிகழ்வுகளும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

குடாப்பகுதியிலும் அராபியக் கடற்பகுதியிலும் ஈரானிய குடியரசு இராணுவப் பிரிவுகள் தொடர்ச்சியான இராணுவ ஒத்திகைகளை நடத்திவருகின்றன.

'ஹூட்' அல்லது திமிங்கிலம் என்றழைக்கப்படும் இப்புதிய ஏவுகணை ஈரானிய கப்பல்களில் பொருத்தப்படக்கூடியது. எண்ணெய் வளங்கள் நிறைந்த இப் பிரதேசம் அமெரிக்க 5ஆவது கப்பல் படையின் நிரந்தர தரிப்பிடமாகவிருப்பது குறிப்பிடக்கூடியது. (ப)(33)

## தலிபான்கள் தாக்குதல்; பாக். வீரர் பலி!

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில் பாக். வீரர்களுக்கும் தலிபான் ஆதரவு தீவிரவாதிகளுக்கும் இடையே கடும் சண்டை நடந்தது. இதில் பாக். இராணுவ வீரர் பலியானார். மூன்று குழந்தைகள் உட்பட 10 பேர் படுகாயமடைந்தனர்.

பாகிஸ்தான் நாட்டிலுள்ள வடக்கு வசிரிஸ்தான் மாகாணத்திலுள்ளது மீரான் ஷா நகர். ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள இந்த நகரின் மேற்கே உள்ள தத்தகேல் பகுதியில் தலிபான் ஆதரவுத் தீவிரவாதிகள் அதிகமாக உள்ளனர். இந்தப் பகுதியில் பாக். இராணுவத்தினர் மீது தீவிரவாதிகள் திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தினர். பதிலுக்கு பாக். இராணுவத்தினரும் தாக்கினர். இந்தச் சண்டையில் பாக். இராணுவ வீரர் ஒருவர் பலியானார். மேலும் மூன்று குழந்தைகள் உட்பட 10 பேர் படுகாயமடைந்தனர்.

# மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென விரும்புகிறேன் கண்ணை மூடிக்கொண்டு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள்!

### தமிழக மக்களிடம் விஜயகாந்த் வேண்டுகோள்

சென்னை,ஏப்.4

மக்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று விரும்புகிறேன். எனவே எனக்கு கண்ணை மூடிக்கொண்டு ஒரு சந்தர்ப்பம் வழங்குங்கள்.


- இவ்வாறு தேசிய முற்போக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் விஜயகாந்த் தமிழக மக்களிடம் கேட்டிருக்கிறார்.

தமிழகம் முழுவதும் சூறாவளிச் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டு பிரசாரம் செய்துவரும் நடிகர் விஜயகாந்த் சென்னை புறநகரில் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றினார்.

மற்ற கட்சியினர் தேர்தல் நேரத்தில் வாக்குறுதிகளை அள்ளி வீசுவார்கள். அதிலும் அ தி.மு.க. தேர்தல் நேரத்தில் வாக்குறுதிகளை 'கிள்ளி' வீசும் இந்தத் தேர்தலில் 'ரி.வி.' கொடுப்பதாகவும், 'காஸ்' கொடுப்பதாகவும் அள்ளி வீசியுள்ளார்கள்.

இதுவரை ஆட்சியில் இருந்தவர்கள் மக்களுக்கு எதுவும் செய்யாமல் கொள்ளை அடித்தனர். நான் மக்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று விரும்புகிறேன். எனவே, எனக்கு கண்ணை மூடிக்கொண்டு ஒரே ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள் - என்று வேண்டுகோள் விடுத்தார் விஜயகாந்த்.

(ஐ)(33)



CONGRATULATIONS
TO OUR FRIENDS



Saso BSc Eng (horns)
1st Class



Dinesh BSc (horns)
2nd Upper

We heart fully appreciate your graduation and great achievement on 15th march 2006 at moraddwa university.

Ever green friends
Chavakachcheri.


## அந்தண மாணவருக்கான வகுப்புகள் சித்திரைப் புத்தாண்டில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.4

இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தால் நடத்தப்பட்டுவரும் அந்தண மாணவர்களுக்கான வகுப்புக்கள் எதிர்வரும் சித்திரைப்புத்தாண்டுடன் ஆரம்பமாகவுள்ளன. அர்ச்சகாச்சாரியார் தரம் 2 இற்கான ஒரு வருடப் பயிற்சிநெறியும் புதிய மாணவர்களுக்கான பகுதிநேர வகுப்புக்களும் நடத்தப்படவுள்ளன.

இப்பயிற்சியில் இணைய விரும்பும் அந்தண மாணவர்கள் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் யாழ். நகர் ஆனைப் பந்தியில் உள்ள தலைமைச் செயலகத்தில் (குருகுலம்) விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு ஒன்றியச் செயலாளர் கேட்டுள்ளார்.

வேதம், ஆகமம், சமஸ்கிருதம், சோதிடம், ஆங்கிலம் ஆகிய வகுப்புக்கள் நடத்தப்படும். (ஐ-202) (27)

## பலிக்களம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.4

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகையான 'பலிக்களம்' (திருப்பாடுகளின் காட்சி) நாளை புதன் கிழமை ஆரம்பமாகின்றது.

மன்ற அரங்கில் 5ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் தினமும் மாலை 7மணிக்கு திருப்பாடுகளின் காட்சி இடம் பெறும். (ஐ-202) (27)

## வணிகமாணி II வெளிவாரிப் பரீட்சையில் சித்தியடைந்தோர்

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ். பல்கலைக்கழகக வெளிவாரிப் பட்டப் பரீட்சைகள் பதிவுகள் அலகின் வணிகமாணி பகுதிII 2002 இற்குரிய பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன. அந்த விவரம் வருமாறு:-

திருநேத்திரம் அபிராமி, நல்லைநாதன் ஆனந்தவள்ளி, கந்தையா ஆனந்தவேல், ஞானசுப்பிரமணியம் ஞானசம்பந்தன், சண்முகநாதன் கிருபாலினி, வீரகத்தி ஜெயதீசன், சண்முகவடிவு சயந்தி,

சுந்தரலிங்கம் சத்தியசீலன், ராஜரட்ணம் சிவகுமார், குலசேகரம் சுகந்தன், குணசிங்கம் தனேஸ்வரன், டேவிட் விக்டர், ஜோசெப், நமசிவாயம் வித்தியா, அருளம்பலம் டானியல் சுரேந்திரன், ராசலிங்கம் ரஜீவன், ஞானசம்பந்தன் செந்தமிழ்ச் செல்வன், சதாசிவம் துளசிதாசன், விஜயகுமார் விஜிதா,

விநாயகமூர்த்தி அருந்தவக்குமார், ராசதுரை சிறிரஞ்சனி, ஸ்ரனிஸ்லஸ் அஞ்சலோ, மார்க்ஜோச்கெனடி, ஜோகராஜா மேரிதீபிகா, ராஜரட்நர்மதா

தேவதாசன் மேரி அன்ரனிற், சிறிஸ்கந்தராஜா சிவசிறி, சண்முகநாதன் பத்மினி, பூபாலசிங்கம் விஸ்ணுசிறி, திருமதி அஜந்திகா சுதாகரன், திருமதி கதிர்காமநாதன் தயாளினி, மகாதேவன் நிவிந்தன், சேதுநாதர் திருச்செல்வி, சின்னத்தம்பி சிறிரங்கன், கணபதிப்பிள்ளை அருண்தவமலர். (து-14)

## பயிற்சிப்பட்டறை

கைதடி,ஏப்.4

சமாதானத்திற்கும் அபிவிருத்திக்குமான செயற்றிட்டப் பயிற்சிப்பட்டறை ஒன்றினை அறவழிப் போராட்டக்குழு நிறுவனத்தின் உதவியோடு கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தியது.

அறவழிப் போராட்டக் குழுத்தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் தலைமையில் வளர்மதி சனசமூக நிலைய மண்டபத்தில் இந்தப் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது நோக்கவுரையை அறவழிப் போராட்டக்குழுச் செயலாளர் எம்.கே.ஜீவகதாஸ் நிகழ்த்தினார்.

தொடர்ந்து, இலங்கையில் சமாதானம் நிலைக்காமல் போனதற்கான காரணங்கள் எவை என்ற தலைப்பில் பனை, அபிவிருத்திச்சபை ஆலோசகரும் அறவழிப் போராட்டக்குழு இயக்குநருமான வீ.ஜி. தங்கவேலும், 'இன்றைய சமாதானத்தை எப்படி வலுவடையச் செய்வது' என்ற தலைப்பில் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி ந. ஜெகதீசனும் 'சமாதானமும் அபிவிருத்தியும்' என்ற தலைப்பில் அறவழிப் போராட்டக்குழுத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தமும் விரிவுரைகளை நிகழ்த்தினார்கள்.

பயிற்சிப்பட்டறையில் பங்குகொண்ட ஐம்பதிற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு இறுதியில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (த-75)


தமிழீழக் கட்டுமானப் பொறியியற் செயலகம் - நடுவப் பணியகம்

### பணிநிலை வேண்டுகை

தமிழீழக் கட்டுமானப் பொறியியற் செயலகத்தால் கீழ்க்காணும் பணிநிலைக்கான வெற்றிடங்கள் தகுதியுடையோரிடமிருந்து கோரப்படுகின்றன.

**01.மொழிபெயர்ப்பாளர்**

* கட்டட நிர்மாணத்துறையுடன் நெருங்கிய தொடர்புடையவராகவும் பல்துறைசார் ஆங்கில விடயங்களை வழுவின்றி தமிழிற்கு மொழிபெயர்க்கும் திறன் உடையவராகவும், மொழி பெயர்ப்புத்துறையில் நீண்டகால அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**02. கணனித் தரவுப் பதியுநர்**

* க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
* கணனித்துறையில் Ms. Office கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தவராகவும், கணனி சார்ந்த பூரண அறிவுடையவராகவும், கணனித் தரவுச் செயற்பாட்டில் அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**03. தொழில்நுட்ப உத்தியோகத்தர்**

* க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ், கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றவராகவும் க.பொ.த. உயர்தரத்தில் சித்தி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
* தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் N.C.T. அல்லது தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ், N.D.T. அல்லது கட்டட நிர்மாண தொழில்நுட்ப சான்றிதழ் B.C.T. அல்லது தொழில்நுட்ப சேவை அது சம்பந்தமான தராதரப் பத்திரங்கள் உடையவராக இருத்தல்வேண்டும்.
* கட்டடத்துறையில் நீண்டகால அனுபவமுடையவராகவும், தொழிலாளர்களின் தொழிற் தகைமையை வரையறை செய்யக் கூடிய அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
* இப்பணிநிலைக்கு தகைமை உடைவர்களிடம் இருந்து தங்கள் சுயவிவரங்கள், சான்றிதழ்களுடன் கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள எமது நடுவப் பணிமனைக்கு எதிர்வரும் 05.04.2006 ஆம் திகதி காலை 10 மணிக்கு நேரில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

(திரு. இ.துளசிமாறன்)
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
தமிழீழக் கட்டுமானப்
பொறியியற் செயலகம், தமிழீழம்.

இல. 45 A, கனகபுரம்,
கிளிநொச்சி.
T.P.: 021 228 5178
(சி-48660)
(54-21.17.14)



### 10 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**முருகேசு பாலசிங்கம்**
(சந்தம்புளியடி, காரைநகர்)
திதி: இன்று (2006 .04.04)

இவ்வுலகில்
1942-06-09

இறையுலகில்
1996-03-25

எந்தையும் தாயுமாய் நீங்கள்
இருந்தெம்மைக் காத்தீர்களே!
என்றுமே பிரியாத பாசத்தோடு
எமக்குள் நீங்கள் வாழ்ந்தீர்களே!
விந்தை உலகிது பொய்யென்றறிந்தே
விரைவாய் போய்ச் சேர்ந்தீர்களே!
வேண்டிய வேளை நீங்கள் இங்கில்லையப்பா
விடையவனிடம் வாழ்கின்றீர்கள்.

உங்கள் பாசத்தில் வளர்ந்த மகன்.
(48928)



மிதிவெடி செயற்பாட்டின்
விழிப்புணர்வுக்கும் பங்களிப்புக்குமான
**சர்வதேச தினம் - ஏப்ரல் 04**

★ அங்க இழப்பு ஆற்றல் இழப்பல்ல
★ மிதிவெடியற்ற உலகைக்காண
ஒன்றிணைவோம்; ஒத்துழைப்போம்.

(சி/48677)
(24.17.14.21)



### மங்காத அன்பின் 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
31
10
1979



விண்ணில்
04
04
2004

**ஈ.வா ஆனந்தசிங்**
04.04.2006

இயேசுவின் திருக்கரங்களில்

அன்பு எளிதில் மரிக்காது
அது ஜீவிக்கிற ஒரு காரியம்
வாழ்க்கையின் எல்லா அபாயங்களின்
மத்தியிலும் அது தழைத்தோங்கும்

அரசடி வீதி, பண்டத்தரிப்பு. குடும்பத்தினர்.



### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
02
09
1925



ஆண்டவன் அடியில்
05
03
2006

திருமதி
**சிவபாக்கியம் பொன்னுத்துரை**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகிவிட்ட எமது தாயாரின் 31ஆம் நாள் வீட்டுகிருத்திய வைபவம் இன்று 04ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்து பல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

21, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (48906)(21.17.14)



### ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்
17
05
1933



விண்ணில்
04
04
2005

அமரர் **கதிரன் கந்தையா**
(முன்னாள் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்)

ஆண்டொன்று ஆனதென்று
அடி வயிறு கொதிக்குதப்பா!
அருமைப் பிள்ளைகள் நாம் உங்கள்
பிரிவை எண்ணி கண்ணீரால்
கரைகிறோம் அப்பா!
நீண்ட தூரம் நீங்கள் போனதையிட்டு
வறண்டு போச்சு எம் நெஞ்சம் அப்பா!
ஆண்டுகள் ஆயிரம் கடந்தாலும்
ஆறாது எம் நெஞ்சம் அப்பா!
கூடி இருந்து வாடுகிறோம்
தேடி எங்கு வருவோம் என்று!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவரை வேண்டுகின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்:
**சந்திரமலர் (மனைவி)**
**யோகச்சந்திரன் நளினி,ரேணுகா,துவாரகா - (பிள்ளைகள்)**
**சாந்தி (மருமகள்)**
**சப்திகா, துசாந்திகா (பேரப்பிள்ளைகள்)**

இல.145, செம்மணி வீதி,நல்லூர். (48924)(21.14.17)

# சண்டிலிப்பாய் கோட்டத்தில் மானிப்பாய் இந்து முதலிடம்

சண்டிலிப்பாய் கோட்டமட்டத்தில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 45 வெற்றிகளைப் பெற்று முதலிடத்தைத் தட்டிச்சென்றது.

கடந்த மாதம் இந்தப் போட்டிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம் ஆகியவற்றில் இடம்பெற்றன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆண்கள் பிரிவில் 24 முதலிடங்களையும் 15 இரண்டாமிடங்களையும் 06 மூன்றாமிடங்களையும் பெற்றுக் கோட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரர்களான அ.நிரோஜன் 15 வயதுப் பிரிவில் 15 புள்ளிகளையும் சி.வினோத் 19 வயதுப் பிரிவில் 15 புள்ளிகளையும் தெ.ரூபின் 19 வயதுப் பிரிவில் 15 புள்ளிகளையும்பெற்று முதன்மை வீரர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று 15, 17, 19 ஆகிய மூன்று பிரிவுகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரர்களே வெற்றிக் கேடயங்களைத் தட்டிச்சென்றனர். (3-203)(24)

# கரவெட்டிப் பிரதேச விளையாட்டுப்போட்டி பொம்மேஸ் வி.க. சம்பியனானது

கரவெட்டி,ஏப்.4

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பொம்மேஸ் வி.க. 65 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும் மனோகரா வி.க. 37 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

இந்தப் போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும்வெற்றிபெற்ற கழங்கங்களின் விவரம் வருமாறு:-

**எல்லே** - பெண்கள் - மனோகரா வி.க., பொம்மேஸ் வி.க., ஆண்கள் - பொம்மேஸ் வி.க., கரவெட்டி ஐக்கிய வி.க.

**கிரிக்கெட்** - பெண்கள் - மனோகரா வி.க., பொம்மேஸ் வி.க., ஆண்கள் - வெக்டர் வி.க., யங்கம்பன்ஸ் வி.க.

**கபடி** - பெண்கள் - பொம்மேஸ் வி.க., யங்கம்பன்ஸ் வி.க. ஆண்கள் - கலைமதி வி.க., பொம்மேஸ் வி.க.

**உதைபந்து** - ஆண்கள் - மனோகரா வி.க., பொம்மேஸ் வி.க. ஆண்கள் - டைமன் வி.க., கலைமதி வி.க.

**கரபந்து** - பெண்கள் - சிவகுமாரன் வி க., பொம்மேஸ் வி.க., ஆண்கள் - சிவகுமாரன் வி.க., குணசேகரன் வி.க.

**வலைபந்து** - பெண்கள் - பொம்மேஸ் வி.க., மனோகரா வி.க.

**தடகளப் போட்டி** - பெண்கள் - ஜீவகன் வி.க. (66 புள்ளிகள்), அண்ணாசிலையடி வி.க. (31 புள்ளிகள்), ஆண்கள்- வெக்டர் வி.க. (44 புள்ளிகள்), என்.சி.சி.வி.க. (38 புள்ளிகள்).

இந்தப் போட்டிகளிலேயே பொம்மேஸ் வி.க. 65 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும் மனோகரா வி.க. 37 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

இதில் 5 ஆயிரம்,10 ஆயிரம் மீற்றர் ஓட்ட நிகழ்வுகளில் பொம்மேஸ் வி.க. வீரன் செ.சண்முகதாஸ் புதிய சாதனைகளை நிலைநாட்டியுள்ளார்.

இந்தப்போட்டிகளில் சிறந்த தடகள வீரனாக என்.சி.சி. விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த க.முரளிதரனும் -

தடகள வீராங்கனையாக ஜீவகன் வி.க வைச் சேர்ந்த ந.மயூரியும் -

கள நிகழ்ச்சியின் சிறந்த வீரனாக நவஜீவன் வி.கவைச் சேர்ந்த கு.கோபிநாத்தும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், 2006ஆம் ஆண்டுக்கான சிறந்த தடகள வீரனாக நவஜீவன் வி.க. வைச் சேர்ந்த கு்.கோபிநாத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (3-70-203) (24)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.4

கோப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான மெய்வன்மைப் போட்டிகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தின் கேட்போர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கழகங்களின் தலைவர்கள், செயலாளர்களைக் கலந்துகொள்ளுமாறு விளையாட்டு உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.(3-190) (24)

## சண்டிலிப்பாயில் தடகளப்போட்டி

வலி.தென்மேற்கு. ஏப்.4

வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகத்தினால் விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன் நடத்தப்படும் இவ்வருடத்திற்கான (2006) தடகள விளையாட்டுப் போட்டிகளின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் இம்மாத இறுதியில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

இப்பிரிவிலுள்ள பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் இதுவரை கரப்பந்தாட்ட போட்டி, எல்லே போட்டி, வலைப்பந்தாட்ட போட்டி ஆகியன நடத்தப்பட்டுள்ளன. கிரிக்கெட் போட்டி, உதைபந்தாட்டப் போட்டி ஆகிய போட்டிகள் விரைவில் நடைபெறவுள்ளன.

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் எம்.ஆர்.மோகனதாஸ் இத்தகவலைத் தெரிவித்தார். (3-135) (27)

## கோப்பாய் பிரதேச பெருவிளையாட்டு முடிவு

கோப்பாய்,ஏப்.4

கோப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்று முடிந்த குழுநிலைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அந்த முடிவுகள் வருமாறு:-

**கிரிக்கெட்**

உரும்பிராய் செல்லப்பா வி.க., நீர்வேலி ஐக்கிய இந்து இளைஞர் வி.க.

**எல்லே**

வீனஸ் வி.க., வாதரவத்தை தமிழ் நிலா வி.க.

**கரபந்தாட்டம்**

ஆவரங்கால் மத்திய வி.க., அச்சுவேலி விக்னேஸ்வரா வி.க. (3-72)(24)

## துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.4

திருநெல்வேலி பாரதிபுரம் ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் மென்பந்து துடுப்பாட்டப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

9 பேர் பங்குபற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இப்போட்டி எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

போட்டியில் பங்குபற்றவிரும்பும் அணிகள் எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்னர் 'ஒலிம்பிக் விளையாட்டுகழகம், கலாசாலை வீதி, பாரதிபுலம், திருநெல்வேலி' என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-202) (24)



கிளிநொச்சி புன்னை நீராவி வித்தியாலயத்தில் நடந்த மெய்வன்மைப் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவிக்கு முருகானந்தா மகாவித்தியாலய முதல்வர் எஸ்.மதுரநாயகம் பரிசில் வழங்குவதையும் முதன்மை வீரர் ஒருவருக்கு கண்டாவளை கல்விக்கோட்ட அதிகாரி வீ.இராசகுலசிங்கம் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பரந்தன் செய்தியாளர்)



கரவெட்டிப் பிரதேச செயலகத்தினால் விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டுவிழாவின்போது 65 புள்ளிகளைப் பெற்று அனைத்துப் போட்டிகளில் சம்பியனாக பொம்மேஸ் விளையாட்டுக் கழகத்திற்குப் பிரதம விருந்தினராக நிகழ்வில் கலந்து கொண்ட யாழ். மேலதிக அரசாங்க அதிபர் சம்பியன் கிண்ணத்தை (கேடயம்) வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: கரவெட்டிச்செய்தியாளர்)

# வாசகர் திருமுகம்

## கச்சாய் - கிளாலி வீதியின் ஒரு பகுதி திருத்தப்படவில்லை

கச்சாய் - கிளாலி வீதியானது கச்சாயில் இருந்து குறிப்பிட்ட சில தூரம் திருத்தப்பட்டு தொடர்ந்து திருத்தப்படாத நிலை காணப்படுகிறது. இதனால் விடத்தற்பளை, கெற்பேலி ஆகிய கிராமங்களில் வாழும் நாம் போக்குவரத்தை மிகவும் சிரமப்பட்டே மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வீதியானது பலவருடங்கள் திருத்தப்படாத நிலையில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்த வீதியில் மழைகாலங்களில் நீர் தேங்கி நிற்பதால் மழைக்காலத்தில் நாம் பெரும் சிரமப்பட்டே நகரங்களுக்கிடையிலான போக்குவரத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளது. தற்பொழுது சில நிறுவனங்களின் உதவியுடன் சில வீதிகள் திருத்தப்படுகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலையிலும் இந்த வீதியைப் புனரமைப்பதற்கு யாரும் முன்வரவில்லை. இவ்விடயம் எமக்கு பெரும் மனவருத்தத்தைத் தருகிறது. இங்கு வாழும் மக்களாகிய நாம் கேட்டுக்கொள்வது யாதெனில், சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கருத்தில் கொண்டு மக்களுக்கான இந்தப் பொதுச்சேவையைச் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(27) - **கெற்பேலி வாழ்மக்கள்.**

## சின்னக்கிணற்றடி ஒழுங்கை புனரமைப்பில் மறக்கப்பட்டது ஏன்?

அரியாலை - சின்னக்கிணற்றடி ஒழுங்கை பல தசாப்தங்களாக எதுவித திருத்தமும் செய்யாத நிலையில் கவனிப்பாரற்று கிடக்கிறது. இது பெயரில்தான் ஒழுங்கையே தவிர, வீதி அளவு அகலம் கொண்ட லேன். இது கண்டி வீதியையும் - நாவலர் வீதியையும் இணைக்கும் பாதை. இன்னும் விளங்கச் சொன்னால் அரியாலையில் இருந்து யாழ்ப்பாணப் பக்கமாக மேற்கூறிய இரண்டு வீதிகளையும் இணைக்கும் முதலாவது வழி. ஓர் அவசரத்திற்குக் கனரக வாகனங்கள் செல்லக்கூடிய கணிசமான அகலம் கொண்ட பாதை.

இதன் திருத்தம் சம்பந்தமாக எத்தனையோ முறை எத்தனையோ சந்திப்புகள், கடிதங்கள் மூலம் தொடர்பு கொண்டு கோரிக்கை விடுத்தும் பயன் ஏற்படவில்லை இதுவரை.

இது சம்பந்தமாக முன்னைய முதல்வர்கள். ஆணையாளர்கள் ஆகியோரிடம் விண்ணப்பித்தும் நிறைவேறவில்லை.

இது தொடர்பாகப் பொதுமக்கள், சன சமூக நிலையங்கள், அபிவிருத்திச் சங்கங்கள் முயன்றும் நடைபெறவில்லை.

அதுமாத்திரமல்ல, மாநகர அபிவிருத்தி, பிரதேச அபிவிருத்தி என காலத்திற்குக் காலம் கூட்டப்பட்ட, கூட்டப்படும் யாழ். மாநகர ஆணையாளரினதும், நல்லூர் பிரதேச செயலரினதும் கூட்டங்களில்கூட பிரஸ்தாபிக்கப்பட்டும், எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டும் கூட்ட அறிக்கைகளில் இடம்பெற்றதே ஒழிய அமுலாக்கம் அறவேயில்லை. உத்தரவாதங்கள் தரப்பட்டன. இடத்தைப் பார்வையிட்டு உத்தேச செலவுகள் மதிப்பிடப்பட்டு, நிதி ஒதுக்கப்பட்டு, வேலைத்திட்டங்களில் வெறுமனே அறிக்கை வடிவில் இடம் பெற்றனவே ஒழிய அமுலாக்கப்படவே இல்லை.

ஆனால், இந்த கடந்த காலப் பகுதிகளில் எத்தனையோ வீதிகள், பாதைகள், ஒழுங்கைகள், கைஒழுங்கைகள் ஏன் ஒரு சில வீடுகட்கு மட்டும் செல்லும் வழிகள் கூட கல்லுப் போட்டு, தார் ஊற்றி புனரமைக்கப்பட்டுள்ளன.

ஏன் இந்தப் பாராமுகம்? இதுக்கு மேலே இந்த ஒழுங்கை (லேன்) திருத்தம் சம்பந்தமாக நாம் அடுத்து என்ன செய்யவேண்டும் எனப் புரியாத புதிராக இருக்கிறது.

யாராவது எமக்குச் சுருக்கமான வழியை அல்லது குறுக்கு வழியையாவது காட்டுவார்களா?

நாமும் வரியிறுப்பாளர்கள்தான். அரியாலையின் பெரும்பாலான பகுதிகள் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குள்ளும், அதே நேரத்தில் யாழ். மாநகர எல்லைக்குள்ளும், நல்லூர் பிரதேச சபைக்குள்ளும் அடங்குகின்றன. ஒருவேளை இதுதான் காரணமாக இருக்குமோ! யார் எம் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யமுன்வரப் போகிறார்கள். இறுதியில் சகலரும் கைவிட்ட கதைதான்போலும்.

சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு.

அரியாலை. (27) **அரியாலையூரான்**

## தவக்காலச் சிந்தனை 35

### மனமாற்றம் பெற்று இறைவனுடன் ஒன்றிப்போம்

தம்மை மறந்து தாம் குற்றமற்றவர்கள் என நினைத்து சமூகத்துக்குத் தீர்ப்பிட நாம் முன் செல்வது பாரிய தவறல்லவா? சிந்திப்போம்!

யார் குற்றமற்றவன் மானிடனாகப் பிறந்த அனைவரும் ஜென்ம பாவம் முதல் பல்வேறு பாவச் சுமைகளைத் தமக்குள் தாங்கியே வாழ்கின்றோம். ''தீர்ப்பிடாதே தீர்ப்புக்குள்ளாவாய் என்ற வேத மொழிக்கேற்ப வாழ முயற்சிப்போம். மன்னிக்கும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்வோம். அற்ப ஆசைகளுக்காக மற்றவர்களைப் பலிக்கடாவாக்கும் பழக்கத்தை விட்டுவிடுவோம் என்று இந்த நிமிடத்தில் இருந்து தீர்மானிப்போம்.

ஆண்டவனை எமக்கு ஆயனாகக் கொண்டுவாழ்வோம் எந்நிலையிலும் அவரது நாமத்தை உச்சரித்து அவரிலே நிறைவுகாணப்பழகிக் கொள்வோம். அவரிலே தளராத விசுவாசம் கொண்டு வாழ்ந்தால் ஆபத்தின் விளிம்பில் கூட உன்னை மீட்டும் வல்லமை அவருக்குண்டு.

தவக்கால வாரத்தில் நாம் எதைச் செய்தோம், எவ்வாறு நம் பெருமான் யேசுவின் திருப்பாடுகளின் நினைவை அனுசரித்தோம், எம்மில் எவ்வளவு தூரம் முழுமை பெற்றோம். சிறிது நேரம் அமைதியாகச் சிந்திப்போம். இருக்கும் இறுதி நாள்களிலாவது மனமாற்றத்துக்குரியவர்களாக மாறி வாழ முயற்சிப்போம். 'என் எதிரிகள் கண்முன் என்கொரு திருவிருந்து படைப்பீர்' என முழக்கமிட்டு இறை உணர்வுகளில் சங்கமிப்போம்.

(24) வி.ஜீனோஜெக்சன், நெடுந்தீவு.(24)

# கொடிகாமம் வைத்தியசாலையில் கடந்த வருடம் 27 ஆயிரம் பேருக்கு சிகிச்சை

சாவகச்சேரி, ஏப்.4

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையில் கடந்த வருடம் சுமார் 27 ஆயிரத்து 479 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர் என பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். ஆறுமுகம் தெரிவித்தார்.

காய்ச்சலினால் 2ஆபிரத்து 263 பேரும், இரத்த அழுத்த நோயினால் 2 ஆயித்து 63 டேரும், வயிற்றோட்டத்தினால் 452 பேரும், வயிற்றுளைவினால் 21 பேரும், நாயினால் கடியுண்டதால் 174 பேரும், விசர்நாய்க் கடியினால் 07 பேரும், விவசாயம் தொடர்பான காயங்களினால் 3ஆயிரத்து 242 பேரும், ஏற்பூசி - 618 பேருக்கும், கர்ப்பவதிக்கான சிகிச்சையில் ஆயிரத்து 141 பேரும், சிறுவர்களுக்கான கிளினிக்கில் ஆயிரத்து 258 பேரும், குடும்பத்திட்ட சிகிச்சையில் 593 பேரும், குடும்பக் கட்டுப்பாட்டு சிகிச்சையில் 103 பேரும், பொது மருத்துவத்தில் 551 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதேவேளை 2005 ஆம் ஆண்டு இந்த மகப்பேற்று நிலையத்தில் 17 குழந்தைகள் பிறந்துள்ளன என்றும்-

இந்த வருடம் கடந்த மூன்று மாத காலத்துக்குள் 17 குழந்தைகள் பிறந்துள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (3-31)

# கணித பாடக் கருத்தரங்கு

தென்மராட்சி,ஏப். 4

தென்மராட்சி கல்வி வலய கணித வள நிலையம் தரம் 11 மாணவர்களுக்கான கணித பாடக் கருத்தரங்கும் செயலமர்வும் நடத்தப்படவுள்ளன.

செயலமர்வுகள் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது.

தரம் 11 வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளின் அதிபர்கள், செயலமர்வில் கலந்துகொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை, ஆசிரியர்களின் பெயர் விவரங்களையும் தேவையான பாட அலகு விவரத்தினையும் எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கு முன்னர் கணிதவள நிலைய பொறுப்பாளரிடம் கையளிக்கவேண்டும் என்றும் -

பின்னர் செயலமர்வு நடத்துவதற்கான பொருத்தமான திகதியினைப் பெற்றுக் கொள்ள முடியும் - என்றும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(எ-117)(32)

# சாவகச்சேரி பிரதேச விவசாயிகள் கூட்டம்

தென்மராட்சி கிழக்கு, ஏப்.4

சாவகச்சேரி பிரதேச சம்மேளன ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நெற்காணி இடாப்பு தயாரித்தலுக்கான விவசாயிகளின் விவரங்கள், சம்மேளன அங்கத்தவர் ஆண், பெண் தொகை என்பன சமர்ப்பிக்கப்படல்வேண்டும என்றும் -

அத்துடன் சிறிய நீர்ப்பாசன வேலைத்திட்டங்கள் செய்த சம்மேளனங்கள், அதற்குரிய கணக்கறிக்கை, சேமிப்பு கணக்கு இல, வங்கி மீதி, கையிருப்பு, மீதி போன்ற விவரங்களைச் சமர்ப்பிக் வேண்டும் எனவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2005 ஆம் ஆண்டு விவசாய சம்மேளன க்ணக்கறிக்கை கணக்கு இலக்கம், வங்கி கணக்கு விவரம், கையிருப்பு மீதி என்ற விவரங்கள் சமர்ப்பிக்கப்படல்வேண்டும் எனவும் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.ஜெகதீஸ்வரி தெரிவித்தார். (3-122)

## ஈரவிழிகளுடன் ஈராண்டு நிறைவின் நினைவுகளில்...

அன்னை மடியில் 10 - 04 - 1925



ஆண்டவன் அடியில் 27 - 03 - 2004

### அமரர் வைரவி சின்னத்தம்பி

*திதி: ஸப்தமி (04.04.2006)*

ஆண்டிரண்டு ஆனதைய்யா
- ஆறவில்லை எங்கள் உள்ளம்
ஏணியாய் இருந்து எங்கள்
- ஏற்றத்திற்காய் ஒளி கொடுத்தீர்!
ஆண்டவனின் பாதமதில்
- ஆறுதல் அடைந்தீர் ஐயா!
பண்புடன் வாழ்ந்த உங்கள்
- பணியைத் தொடர்கின்றோம்.
எங்களுடன் நீங்கள் என்றும்
- இறந்தும் ஐயா வாழ்ந்திடுங்கள்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*மலைவேம்படி,*
*அளவெட்டி தெற்கு,*
*அளவெட்டி.*
T.P.: *0602213009*

*உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(48878)(51-32-11-14)

# எச்சரிக்கை

மக்களின் நம்பிக்கை வென்ற WATERTEC தயாரிப்புகளைப் போன்ற அதற்குச் சமமான அமைப்புக்களைக் கொண்ட போலி சின்க் டெப் வகைகள் தனி நபரினாலோ அல்லது ஒரு குழுவினராலோ இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுவதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது

இது தரம் குறைந்த போலி தயாரிப்புகளை விற்பனை செய்து லாபமீட்டும் திட்டமிட்ட மோசடியாகும்.

மேலே சுட்டிக்காட்டப்பட்ட போலியான தயாரிப்புகள் மலேசியாவில் தயாரிக்கப்பட்டவை அல்ல என்பதை பொது மக்களுக்கு அறியத் தருகின்றோம்.

இந்த தரம் குறைந்த பொருட்களை தயாரிக்கும் அல்லது இறக்குமதி செய்பவர்கள் தொடர்பாக தகவல் கொடுப்பவர்களுக்கு மலேசிய WATERTEC நிறுவனத்தின் மூலம் பரிசு வழங்கப்படுவதோடு மோசடிக்காரர்கள் மீது சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

இந்த மோசடியை தவிர்ப்பது எவ்வாறு?
WATERTEC தயாரிப்புகளை வாங்கும் போது

**WATERTEC**
Simply Better

உண்மையான சின்னம் இருக்கிறதா என்று பாருங்கள்




License No : 50445
செண்ட் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட்
524, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5 ஃபெக்ஸ்: 2446554

# சாவற்கட்டில் முதியோர் சங்கம்

வலி.தென்மேற்கு, ஏப்.4

சாவற்கட்டு கிராம அலுவலர் பிரிவில் முதியோர் சங்கம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

சாவற்கட்டு கிராம அலுவலர் திருமதி ஜே.பிறேஸ்சிலா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வே. அருந்தவராசா கலந்து கொண்டு முதியோர் சங்கங்களின் செயற்பாடு மற்றும் கடமைகள் என்பன பற்றி உரை நிகழ்த்தினார்.

இக் கூட்டத்தில் 62 முதியவர்களுக்கு படுக்கை விரிப்புகளும் வழங்கப்பட்டன. (3-13)

# மிதிவெடி விழிப்புணர்வு தினத்தை ஒட்டி விசேட நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஏப்.4

மிதிவெடி செயற்பாட்டின் விழிப்புணர்வுக்கும் பங்களிப்புக்குமான சர்வதேச தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதனை ஒட்டி யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

விசேட நிகழ்வாக மிதிவெடிசெயற்பாடு தொடர்பான கண்காட்சியும் யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மிதிவெடிகளால் பொதுமக்கள் பாதிக்கப்படுவது இன்று உலகளாவிய ரீதியில் பூதாகரமான பிரச்சினையாக உருவெடுத்துள்ளமையால் ஐக்கிய நாடுகள் அமையம் ஏப்ரல் 4ஆம் திகதியை மிதிவெடி செயற்பாட்டின் விழிப்புணர்வுக்கும் பங்களிப்புக்குமான சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஐ-202)(27)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

அன்னை மடியில் 02 - 12 - 1939



ஆண்டவன் அடியில் 05 - 03 - 2006

### அமரர் செல்லையா சபாரத்தினம்

*(இளைப்பாறிய கமநல அபிவிருத்தி திணைக்கள பதவி நிலை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்.)*

தோற்றம் மறைந்தாலும் எம் துயரமோ மறையவில்லை
காலங்கள் கரைந்தாலும் எங்கள் கவலைகள் ஆறவில்லை
கண்டதெல்லாம் கனவாகி கணப்பொழுதில் மறைந்ததுவோ?
பண்புடனே பார்த்து வந்தோம் பாரை விட்டுப் போனதேனோ?
எமைவிட்டுப் பிரிந்து விட்ட எம் பாசமலரே!
ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் மாதங்கள் ஆனாலும் - ஏன்
எங்கள் உயிர் மூச்சு உள்ளவரை - நீங்கள்
எங்கள் இதயங்களில் உயிருடன் வாழ்வீர்கள்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*இன்று (04.04.2006) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*'கமலை',உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.*

**குடும்பத்தினர்.**

(48872)(51-32-11-14)


கூரை அமைப்பின் புதிய அலை

அன்டன் சுப்பர் ஷெல்டா




- கனம் 2.5 மி.மீ
- வேறு கூரைத்தகடுகளைவிட மலிவானது
- வெப்பம் குறைந்தது
- மழை நேரங்களில் இரைச்சலற்றது
- சுகாதார இடையூறு அற்றது
- துரு பிடிக்காதது
- 20 வருடங்களுக்கு மேல் நீடிக்கக்கூடியது
- நிறம் மாறாதது
- குடியிருப்பு, விவசாய, வர்த்தக, கட்டிடங்களுக்கு உகந்தது

நீடித்த பாவனைக்கு பொருத்தும் வழிகாட்டியின்படி பொருத்துங்கள்
இதனை விற்பனையாளரிடம் பெற்றுக் கொள்ள மறவாதீர்கள்

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துநர்கள்
செண்ட் அந்தனீஸ் ரூவ்பிங் (பிரைவேட்) லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ. பே: 2324261-5, 2337283-5 ஃபெக்ஸ்: 2446554

விநியோகஸ்தர்
நாராயணா கட்டிடப் பொருள் வர்த்தகர், 95/1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.


# நினைவஞ்சலி

| 19 ஆம் ஆண்டு | 15 ஆம் ஆண்டு | 14 ஆம் ஆண்டு |
|---|---|---|
| செல்வி ப. இராமநாதன் | டாக்டர் சி. வேலாயுதன் | திருமதி ட. வேலாயுதன் |
| (ஓய்வு பெற்ற அதிபர், இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்.) | (கண் வைத்திய நிபுணர்) | |
| தோற்றம் 24.06.1926 மறைவு 05.04.1987 | தோற்றம் 04.10.1925 மறைவு 31.10.1991 | தோற்றம் 14.10.1930 மறைவு 16.06.1992 |

திதி:04.04.2006

இடர்கள் பல வந்தபோதும் இடைவழியில் சலிப்படையாது
பாசத்தோடு அரவணைத்தவர்களை நெஞ்சம் மறப்பதில்லை.

*126/4, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(48541)(51-32-11-14)

**சகோதரி.**

# உலக அங்கீகாரம் பெறுவதற்கான வாய்ப்பாக உள்ளூராட்சித் தேர்தலைப் பயன்படுத்துவோம்!

## தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் மத்தியில் இளம்பரிதி தெரிவிப்பு



பளை,ஏப்.4

சர்வதேச அங்கீகாரத்திற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் துரோகத்தனத்திற்கு அரசியல் ரீதியாக முடிவு கட்டுகின்ற ஒரு நல்ல வாய்ப்பாகவும் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை நாங்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களுக்கான ஒன்று கூடலில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ்த் தேசிய மக்கள் தங்கள் நாட்டின் பெரும் பகுதியை எதிரிப் படைகளிடமிருந்து மீட்டெடுத்து அந்த நிலத்தை தங்களுடைய படைப் பலத்தின் மூலம் தக்கவைத் துக்கொண்டு அங்கு ஒரு நடைமுறை அரசை உருவாக்கியுள்ளனர்.

எதிரிகளிடமிருந்து எஞ்சிய நிலத்தையும் மீட்டெடுத்து ஒரு கௌரவமான - பாதுகாப்பான - சுதந்திரமான முறையில் தங்களுடைய தாயகத்தில் தங்களின் வாழ்வை நிர்ணயித்துக் கொள்வதற்கான வீரம் செறிந்த போராட்டத்தில் மாவீரர்கள் தங்களை அர்ப்பணித்திருக்கின்றனர். அதே போல் நாட்டுப் பற்றாளர்களும் விடுதலைப் போராட்டத்திற்கு ஈகம் செய்துள்ளார்கள்.

இவர்களுடைய தியாகத்தால் - அர்ப்பணிப்பினால் - வீரம் செறிந்த எமது தலைவருடைய வழிநடத்தலினால் - எமது மக்களுடைய உறுதியான பங்களிப்பினால் - நாம் எமது இலக்கை அடைவதற்கான முக்கிய கட்டத்தில் இன்று நின்றுகொண்டிருக்கின்றோம்.

சரியான தலைமைத்துவம்கொண்ட உண்மையான விடுதலை இயக்கமும், விழிப்புணர்ச்சி கொண்ட மக்கள் தளத்தைக் கொண்டுள்ள விடுதலைப் போராட்டமும் வெற்றியைப் பெற்றே தீரும்.

இராணுவ ரீதியாக எதிரி எங்களைக் கையாள்கின்றபோது நாங்களும் இராணுவ ரீதியாக எதிர்கொண்டு முறியடித்து எங்களுடைய விடுதலைப் போராட்டத்தைப் பலப்படுத்தி தேசியத்தை வலிமையாக்கி எமது தேசத்தை நிர்ணயிக்கின்ற வேளையில் -

அரசியல் வழிமுறைகள் மூலம் எதிரிகள் நெருக்கடிகளையும் தண்டகளையும் ஆக்கிரமிப்புகளையும் மேற்கொள்கின்றபோது, அதை உடைத்தெறிவதற்கான அரசியல் வியூகங்களை வகுத்து எமது தலைமைப் பீடம் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றது.

இராஜதந்திர ரீதியாக எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்காக எதிரி எடுத்த ஒவ்வொரு முயற்சிகளையும், வியூகங்களையும் எமது தலைமைப்பீடம் ஆய்வு ரீதியான நகர்வுகளை மேற்கொண்டு முறியடித்து ஒரு முன்னேற்றகரமான சூழ்நிலையில் இராணுவ, அரசியல், இராஜதந்திர பரிமாணங்களோடு நிமிர்ந்து நிற்கிறது.

சர்வதேசத்தின் மத்தியில் அதிக செல்வாக்குடன் அதிகம் தொடர்புபட்டபோதும் பலம்இழக்காமலும் மிகவும் முற்போக்கான மனித உரிமைகளைப் பேணி மதித்து செயற்படுகின்ற ஒரு நாகரிகமான விடுதலைப் போராட்ட சக்தியாக விடுதலைப் புலிகளும் நாகரிகமான மக்கள் கூட்டமாக எங்களுடைய தமிழ் மக்களும் சர்வதேசத்தில் தங்களை நிலைப்படுத்திக்கொண்டிருக்கின்ற காலகட்டம் இதுவாகும். இங்கு வருகின்ற ஒவ்வொரு அரசியல் தளங்களையும் எமது விடுதலையின் தேசிய வலிமைக்கும் விடுதலைப் போராட்டத்திற்கும் பயன்படுத்துவோம் - அதற்குத் தடையாக இருக்கின்ற எதிரிகள், எதிரிகளுடன் சேர்ந்திருக்கின்ற துரோகக் குழுக்கள் என்பவற்றையும் தனி நபர்களையும், துணைக்குழுக்களின் செயற்பாடுகளையும் தூக்கி எறியவேண்டும். இதனை கிழக்கில் தமிழ் மக்கள் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் மூலம் நிரூபித்துக்காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணம், மன்னார், வன்னி, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் தேர்தல் நடவடிக்கைகள் பிற்போடப்பட்டாலும் எதிர் காலத்தில் அவை நடைபெறுகின்றபோது அந்த அரசியல் களத்தில் மக்கள் தேசிய ரீதியான - ஒட்டுமொத்தமான - முடிவை எடுப்பதன் மூலம் சர்வதேச அங்கீகாரத்தை வேண்டி நிற்கின்ற விடுதலைப் போராட்டத்திற்கு அது ஒரு தீர்க்கமான முடிவை ஏற்படுத்தும் - என்றார். (ஐ-7)(33)

# விசாரணைக்காக வெள்ளைவானில் கொண்டுசென்ற கணவன் எங்கே?

## மனித உரிமைக் குழுவிடம் இளம் மனைவி உருக்கமான வேண்டுகோள்

வலி. தென்மேற்கு , ஏப். 4

கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இரவு ஆயுத முனையில் வெள்ளை நிற வானில் வந்தவர்களால் வீட்டிலிருந்து கொண்டு செல்லப்பட்ட மூன்று பிள்ளைகளின் தந்தையான எனது கணவர் கமில்டன் மரீந்திரன் (29வயது) இன்னும் விடுவிக்கப்படவில்லை. அவர் இதுவரை வீடு திரும்பாதது குறித்து நாம் மிகுந்த கவலையும், வேதனையும் அடைகின்றோம். தயவு செய்து இவரைக் கண்டு பிடித்து விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

இவ்வாறு இளவாலை வட்டப்புலம் என்னுமிடத்தை சேர்ந்த இளம் பெண் ஒருவர் யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பொறுப்பாளரிடம் நேரில் சமர்ப்பித்துள்ள கடிதம் ஒன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த வாரம் சமர்ப்பித்துள்ள இந்தக் கடிதத்தில் திருமதி. க.பிறிச்சிட் எனப்படும் இளம் பெண் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி இரவு 10 மணியளவில் எமது வீட்டுக்கு வந்து வீட்டை சோதனையிடப்போவதாகக் கூறினார்கள். சீருடைதரித்த இரண்டுபேரும் சிவில் உடையில் நான்குபேரும் தமது முகங்களைக் கறுப்புத்துணியால் கட்டியவாறு நிற்கக் காணப்பட்டனர். நாம் கதவை திறந்தபோது எமது கணவரை விசாரணைக்கு வருமாறு கூறி தம்முடன் வெள்ளை வான் ஒன்றில் ஏற்றிச் சென்றனர். இதுபற்றி மறு நாள் யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்திற்கும், யாழ். கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்கும், இளவாலை பொலீஸ் நிலையத்திற்கும் நான் அறிவித்திருந்தேன். ஆனால் மூன்று மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை அவர் வீடு திரும்பவில்லை. அவருக்கு என்ன நடந்தது? எங்கிருக்கிறார்? விவரம் ஒன்றும் தெரியவில்லை. எனது பிள்ளைகள் அப்பா எங்கே என்று அழுதவாறு கேட்கின்றார்கள்.

எனது கணவரின் விவரம் அறிந்து அவரை விரைவில் விடுவிப்பதற்கு ஆவன செய்யுமாறு தங்களை தயவாக வேண்டுகின்றேன்.

இவ்வாறு அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. கடிதத்தின் பிரதி யாழ். கண்காணிப்புக் குழுப் பொறுப்பதிகாரிக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஐ-135) (27)

### சாயி சமித்தியில் ராம நவமி விழா

யாழ்ப்பாணம், ஏப்.4

திருநெல்வேலி இராமநாதன் வீதியில் உள்ள யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளைமறுதினம் வியாழக் கிழமை பி.ப 4.30 மணி தொடக்கம் ஸ்ரீராம நவமி விழா கொண்டாடப்படும்.

காயத்திரி மந்திர ஜெபம், ராம கான பஜனை, விசேட சொற்பொழிவு ஆகியன இடம் பெறும். (ஐ) (27)




# உலக ஆன்மீகக் குரு ரவிஷங்கரின் சத்சங்கமம் யாழ்ப்பாணத்தில்



யாழ்ப்பாணம்,ஏப்.4

உலகப்புகழ்பெற்ற ஆன்மீகக் குரு தவத்திரு ஸ்ரீ ஸ்ரீ ரவிஷங்கர் அவர்களின் மகா சத்சங்கமம் முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

ஞானம், தியானம், கானம் மற்றும் தெய்வீக அருளாசி என்பனவற்றின் சங்கமமாகக் கருதப்படும் இந்த மகா சத் சங்கமம் எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற இருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச வாழும் கலை நிறுவனம் இந்த சத்சங்கமம் நிகழ்ச்சியை இங்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த ஆன்மீக நிழ்வில் குடும்பமாகப் பங்குகொண்டு குருஜியின் தரிசனம் மற்றும் ஆசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சர்வசேத வாழும் கலை அறநிறுவனம் அழைப்பு விடுத்திருக்கிறது. (ஐ)(33)

# இந்து குருமார்களுக்கு அ.அட்டை ஒன்றியம் ஊடாக வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.4

இந்துசமய அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டத்திற்கமைய சர்வதேச இந்து மத குருமார் ஒன்றிய அங்கத்தவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை ஒன்றியத் தலைமைச் செயலக நிர்வாக உத்தியோகத்தர் மேற்கொண்டுள்ளார்.

ஒன்றியத்தில் அங்கத்துவம் வகிக்கும் அந்தணச் சிவாச்சாரியர்கள் மற்றும் குருமார்களுக்கே இந்த விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன. முதற்கட்டப் பதிவுகளில் விண்ணப்பித்தோருக்கு விரைவில் அடையாள அட்டைகள் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காதோர் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் 3x21/2 சென்றிமீற்றர் அளவுடைய 3 புகைப் படங்கள் (குரு தட்சணத்துடன்), தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் நேரில் வந்து விண்ணப்பிக்குமாறு தலைமைச் செயலக நிர்வாக உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.(ஐ-202)

# மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியின் 70 ஆண்டு சேவைப் பூர்த்திவிழா

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் 70 ஆண்டுகள் சேவை பூர்த்திவிழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை அதிகார சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை மின்சார சபையின் ஓய்வுபெற்ற பொறியியலாளர் வி.வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் கே. கணேஷ், யாழ். மாவட்ட சுகாதார சேவைப் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.கேதீஸ்வரன், வலி.மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ், யாழ். மாவட்ட நீதிபதி ரி. விக்கினராஜா, இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதிபதி கே.பி.வரதராஜா, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பி.சிவலிங்கம், முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கனகசபாபதி, வைத்திய கலாநிதி கே.சுரேஸ்குமார், வைத்திய கலாநிதி எஸ். மனோகரன், வைத்திய கலாநிதி சிவன்சுதன், வைத்திய கலாநிதி எஸ்.குகதாசன் ஆகியோர் கலந்துகொள்வர். (ஐ-202) (27)

### ஊர்காவற்றுறைக்கு நீதிவான் நியமனம்

யாழ்ப்பாணம், ஏப்.4

ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்கு புதிய நீதிவானாக எஸ்.ரொஸ்கி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவானாக கடமையாற்றி வந்த பா.சுப்பிரமணியம் ஓய்வுபெறுவதை யடுத்தே இவர் நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மலைநாட்டுப் பகுதியில் சட்டத்தரணியாக நீண்ட காலம் கடமையாற்றி வந்த இவர் முதன் முதலாக நீதிபதியாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்கு நியமனம் பெறுகிறார். (3-13)(51)

# அளவெட்டியில் 3 கோயில்களில் ஒரே இரவில் திருடர்கள் சூறை

ஏழாலை, ஏப்.4

அளவெட்டிப் பகுதியில் உள்ள மூன்று ஆலயங்களில் ஒரே இரவில் திருட்டுகள் இடம்பெற்றுள்ளன.

கடந்த மார்ச் 29ஆம் திகதி இரவு அளவெட்டி வறுத்தலை பிள்ளையார் ஆலயத்தின் மூல விக்கிரகம் பெயர்க்கப்பட்டு அதன் கீழ் இருந்த ஐம்பொன் தகடும் சிறிய விக்கிரகங்களும் அபகரிக்கப்பட்டன. அன்றைய இரவு அளவெட்டி அம்பனை இராவத்தை வைரவர் ஆலயத்தின் விக்கிரகமும் பெயர்க்கப்பட்டு அதன் கீழ் இருந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

அளவெட்டி மத்தியில் அமைந்துள்ள பழம்பெரும் ஆலயமான பசுபதீஸ்வரர் ஆலயத்தின் உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பொருள்களையும் விக்கிரகங்களையும் திருடியுள்ளனர்.

ஒரே சமயத்தில் மூன்று ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடப்பட்டமை அடியார்களை மிகவும் வேதனைக்குள்ளாக்கியிருக்கின்றது. (ஐ-45)(27)

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
1963 - 04 - 13

உதிர்வு
2006 - 02 - 19



## திருமதி சிறீகாந்தா தவமணி (துவம்)

**திதி: சஷ்டி**

எமது குலவிளக்கு திருமதி சிறீகாந்தா தவமணி அவர்களின் அகாலமரணச் செய்திகேட்டு உடன் ஓடோடிவந்து உதவிய அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் விபத்து நடைபெற்றவுடன் மனமுவந்து வாகன உதவி வழங்கியவர்களுக்கும் மருத்துவ உதவி புரிந்த மருத்துவ, தாதியர்களுக்கும் மற்றும் உதவிபுரிந்த யாவருக்கும் எமது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குறிப்பு:** அமரர் அவர்களின் அந்தியேட்டிக் கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (04-04-2006) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

கச்சாய் தெற்கு, கொடிகாமம். (48931)(24-32-17-14) குடும்பத்தினர்.


## பஞ்சரத்தினக் கீர்த்தனை

கோண்டாவில்,ஏப்.4

இணுவில் - மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவிலின் ஸ்ரீ ராம நவமியும், பஞ்சரத்தினக் கீர்த்தனை ஆராதனையும் நாளை மறுதினம் நடைபெறவுள்ளன.

காலை 8 மணிக்கு சங்கற்பமும், 8.30 மணிக்கு பஞ்சரத்தின கீர்த்தனை பாராயணங்கள் திரவிய அபிஷேகமும் 9.30 மணிக்கு நவகலச அபிஷேகமும், 10 மணிக்கு விஷேட பூசை, சகஸ்ரநாம அர்ச்சனை என்பனவும் இடம்பெற்று நண்பகல் 12 மணிக்கு அன்னதானமும் இடம்பெறவுள்ளது.

பஞ்சரத்தின கீர்த்தனை, பாராயணங்களில் அனைத்துக் கலைஞர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள் கேட்டுள்ளார்.

(த-49) (32)


# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
26 - 10 - 1977

ஆண்டவன் அடியில்
05 - 01 - 2006



## அமரர் தபேந்திரன் மதன்

*உன்னை நினைக்கும் பொழுது*
*கண்கள் நனையும் அழுது*
*எம்மை அழைக்கும் உறவு*
*இதயம் முழுதும் நிறைவு*
*கண்துடைக்க கைகள்*
*காணாது இரண்டு இங்கே*
*மண்ணை மறந்ததேனோ*
*மரணம் மறக்கப் போமோ*

*இல்லறத்தின் மடியில் தவழ்ந்தவனே - நீ*
*தரைக்குள் தூங்கப் போறியா?*
*தந்தையைப் போல் தளர்வில்லாதவனே!*
*சீராய் உனக்கு தெய்வபதம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.*

நாளை (05-04-2006) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தும்பளை வீதி,
பருத்தித்துறை. (சி/48679)(32-17-14)

தகவல்:
குடும்பத்தினர்.



# மாபெரும் யாழ். வர்த்தக கண்காட்சி –2006

## பண்டிகைக் காலத்தைக் கொண்டாடுங்கள்!


காலம்: ஏப்ரல் 8 முதல் 11 வரை

இடம்: யாழ்/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு :-
DREAM SOLUTIONS (PVT) LTD
275, JAFFNA ROAD, MANIPAY


# மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் 70 ஆண்டுகள் சேவைப் பூர்த்தி விழா

## 04-04-2006 செவ்வாய்க்கிழமை







மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் கம்பீரமான முகப்புத் தோற்றம்



1952 இல் இலங்கைக்கு விஜயம் செய்த நடிகர்திலகம் சிவாஜிகணேசன் இவ் வைத்திய சாலைக்கு வருகை தந்தார். அன்றைய பணிப்பாளர் சபைத் தலைவர் முதலியார் பீ.எம். சங்கரப்பிள்ளையுடன் காணப்படுகின்றார். நடுவிலே வைத்தியகலாநிதி 'சாக்கோ' வும் காணப்படுகின்றார்.



தென்கிழக்காசியாவிலே மிகச் சிறந்ததோர் கூட்டுறவு வைத்தியசாலையாக மிக உன்னத சேவையை ஆற்றி வந்த இவ் வைத்தியசாலை தனது 70 ஆண்டுகள் வைத்திய சேவையைப் பூர்த்தி செய்து பெருமிதம்கொள்கின்றது.

04.04.1936 இல் முதல் காலடியை எடுத்து வைத்த இவ் வைத்தியசாலை இன்று 04.04.2006 இல் 70ஆண்டுகள் சொல்லொணாக்கஷ்டங்களின் மத்தியிலும் வேரூன்றி, விருட்சமாக வளர்ந்து மக்களுக்கான மகத்தான வைத்திய சேவையைப் பூர்த்தி செய்து தன்னிகரற்று வீறுநடை போடுகின்றது. நாட்டு நிலைமைகளால் வைத்திய சேவையைத் தொடர்வதில் இடர்கள் ஏற்பட்டபோதும், இவ் வைத்தியசாலை தனது வைத்திய சேவையைத் தொடர்ந்து ஆற்றுவதற்குப் பல வழிகளிலும் பல நிறுவனங்கள் இன்றுவரை உதவியளித்து கைகொடுத்து உதவுகின்றன.

அவற்றுள் பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம், G.T.Z நிறுவனம், US AIDநிறுவனம், மகாராஜா நிறுவனம், T.R.R.O. கலிபோர்னியா நிறுவனம் போன்றவை முக்கிய பங்குகள் ஆற்றிவருகின்றன. அதிலும் குறிப்பாக கலிபோர்னிய T.R.R.O. நிறுவனம் எக்காலத்திலும் இம் மகத்தான சேவையைக் கைவிடாது தொடர்ந்து செயற்படுத்தும்படியும், அதற்கான நிதிவசதிகள் உட்பட சகல செயற்பாடுகளையும் தாம் மேற்கொள்வோம் எனவும் தெரிவித்து, ஊக்கமளித்துக் கொண்டிருக்கின்றது. இந் நிறுவனத்தின் உதவியால் எத்தனையோ கஷ்டங்களின் மத்தியிலும் இவ் வைத்தியசாலை இயங்கிக்கொண்டிருக்கின்றது. வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையின் ஆக்கபூர்வமான செயற்பாடுகள், வைத்திய நிபுணர்கள், தாதிமார், ஊழியர்கள் ஆகியோரின் தன்னலமற்ற உன்னத சேவைகளினால் 24 மணித்தியால இரவு பகல் சேவைகளை இவ் வைத்தியசாலை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

### இலவச சலரோக சேவை:

இங்கிலாந்தில் இயங்கிவரும் 'ரத்தினம் பவுன்டேசன்' நிறுவனத்தின் அனுசரணையுடன் இவ் வைத்திய சேவை ஆரம்பிக்கப்பட்டு தினமும் பல நோயாளர்கள் இலவச வைத்தியசேவையைப் பெற்றுவருகின்றனர். இந் நிறுவனத்தின் முக்கிய பங்குதாரர்கள் சித்தன்கேணியைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மகப்பேற்று சிகிச்சை:

நிறுவனத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட நவீன தொழிநுட்ப வைத்திய உபகரணங்களின் உதவியோடும், இங்கிலாந்தில் உள்ள 'ஸ்கொட்' (STANDING COMMITTEE OF TAMIL SPEAKING PEOPLE, U.K.) நிறுவனத்தின் அனுசரணையுடனும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்துவரும் மகப்பேற்று நோயாளர்களுக்கான சேவையை சிறந்த முறையில் இவ்வைத்தியசாலை மேற்கொண்டு வருகின்றது. பெண்ணியல் மகப்பேற்று நிபுணராக வைத்திய கலாநிதி கே. சுரேஸ்குமார் இச்சிகிச்சைச் சேவையை ஆற்ற முன்வந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். இம் மகப்பேற்று சிகிச்சை பலவருடகால இடைவெளியின்பின் இவ் வைத்தியசாலையில் ஆரம்பிப்பதற்கு இவர் கைகொடுத்துதவியுள்ளார்.

### இருதய வைத்திய சேவை:

யாழ். மாவட்டத்தில் அரச போதனா வைத்தியசாலையிலே மட்டும் நடைபெற்றுவரும் இம்மருத்துவசேவை, இவ் வைத்திய சாலையிலும் வைத்திய கலாநிதி எஸ். மனோகரன் அவர்களின் அனுசரணையுடன் நவீன தொழிநுட்ப வைத்திய உபகரணங்கள் மூலம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

### மருத்துவ பொதுச்சேவை:

வைத்திய கலாநிதி மகாதேவா கடந்த 10 வருடங்களாக இவ் வைத்தியசாலையில் தொடர்ந்து சேவையாற்றி வருவதோடு, நோயாளர்களின் வருகையும் அதிகரித்து சிகிச்சைகள் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### பற்சிகிச்சை:

வைத்திய கலாநிதி ரீ.காம்லெட், வைத்திய கலாநிதி கே. அகிலன் இருவரும் இச் சிகிச்சையை மேற்கொண்டு வருகின்றனர்.

### பிற சிகிச்சைகளும் வசதிகளும்:

* கண்பரிசோதனை சேவை
* அம்புலன்ஸ் சேவை
* ஆய்வுகூட வைத்திய சேவை
* தனி அறையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான வசதி

இவ்வாறான வைத்திய சேவைகளை மேலும் விஸ்தரிப்பு செய்து, பொது மக்களுக்கு இலகுவான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு வைத்தியசாலைப் பணிப்பாளர் சபை பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வதியும் பல நிறுவனங்களின் உதவிகளையும் இச் சபையினர் பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

இக் கூட்டுறவு வைத்தியசாலையின் எதிர்கால சேவைகளும் சிறப்புற அமைவதற்கு அனைவரது ஒத்துழைப்பையும், நல்லாசிகளையும் வேண்டி நிற்கின்றோம்.

திரு.வி.வேலுப்பிள்ளை (ச.நீ)
தலைவர்,
பணிப்பாளர் சபை, மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை.


மனதார வாழ்த்துகின்றேன்.
சித்தி விநாயகர் வர்த்தக நிலையம்
பிள்ளையார் கோவிலடி, மூளாய்.
077 3276430
உரிமையாளர்:க.பாலச்சந்திரன்

வைத்திய சேவையை மனதார வாழ்த்துகின்றேன்.
கணேசா ஹாட்வெயர்
பிரதான வீதி,சுழிபுரம்.
077 7326407
உரிமையாளர்:த.முருகசோதி

சகல விதமான பால்மா வகைகளும் மருந்து வகைகளும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
சங்கானை பார்மஸி
பிரதான வீதி, சங்கானை.

வைத்தியசாலையின் சேவையை வாழ்த்துகின்றோம்.
பாக்கியரத்தினம் ஹாட்வெயர்ஸ்
பிரதான வீதி, சங்கானை.

உலகின் எப் பாகத்திலும் 'வெஸ்ரேன் யூனியன்' மூலம் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.
சரணியா தொலைத் தொடர்பகம்
ந. காசிப்பிள்ளை
மார்க்கட், சங்கானை.
இல:06022I 2243

70 வருட சேவையை மனப்பூர்வமாக வாழ்த்தும்
தரன் ரேடர்ஸ்
130, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

70 வருட சேவையினை சிறப்புறக் கொண்டாடும் எமது வைத்தியசாலையை வாழ்த்துகின்றேன்.
சரவணாஸ் வர்த்தக நிலையம்
யாழ். ஆஸ்பத்திரி முன்பாக.

70 வருட சேவையைவாழ்த்துகின்றோம்
சகலவிதமான பாடசாலை உபகரணங்களையும் ஒரே இடத்தில பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்;
விமதேவன் புத்தக நிலையம்
பிரதான வீதி, சுழிபுரம்.

70 வருட சேவையை மனப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்
சகல விதமான பலசரக்கு பொருள்களையும் பெற்றுக் கொள்வதற்குரிய இடம்
பத்மநாதன் ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி, சங்கானை.

மனதார வாழ்த்துகின்றேன்
ஜெயந்தி மில் கஜி கொமினிகேஷன்
பிரதான வீதி, சுழிபுரம்.
தொ.பே.இல:0212225271
உரிமையாளர்: ந.தவம்

# 'மஹிந்த சிந்தனை' குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு



கிளிநொச்சி,ஏப்.4

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 'மஹிந்த சிந்தனை'யில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்களால் தமிழ்மக்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகள், பதிப்புகள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கை அக்கராயன் பிரதேசத்தில் கடந்தவாரம் முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி ராஜபக்ஷவின் உருவம் தாங்கிய ஊர்தியில் ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டு அக்கராயன் கண்ணகைபுரம் பகுதி வீதிகளில் 'மஹிந்த சிந்தனை' ஒலிபரப்பப்பட்டது.

இதனைப் பெருமளவான மக்கள் கூடி நின்று வேடிக்கை பார்த்ததுடன், மஹிந்த சிந்தனையில் கூறப்பட்ட ஒற்றையாட்சித் தீர்வின் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வையும் பெற்றுக்கொண்டனர் என்று எமது செய்தியாளர் கூறினார்.

(த-307) (24)

# விசர்நாய்க்கடி ஊசி மருந்துக்கு கிளி. ஆஸ்பத்திரியில் தட்டுப்பாடு

பரந்தன், ஏப்.4

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் விசர்நாய்க்கடிக்கான ஏ.ஆர்.வி. ஊசி மருந்திற்குத் தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி இ.சதா னந்தன் தெரிவிக்கையில்:-

இம்மாவட்ட வைத்தியசாலையில் கடந்த சில வாரங்களாக நாயினால் கடியுண்டு சிகிச்சை பெற வருபவர்களின் தொகை அதிகரித்துள்ளது. இதனால், ஏ.ஆர்.வி. தடுப்பு மருந்து முடிவடைந்துள்ளது.

எனவே தற்போது விசர்நாய்க்கடிக்கு ஆளாகி சிகிச்சைக்கெனவரும் நோயாளர்கள் மாவட்ட வைத்தியசாலை நோயாளர் காவுவண்டி மூலம் உடனுக்குடன் வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் - என்றார்.

(த-352) (27)




# நாச்சிக்குடா கரையோரத்தில் குடியேறிய மக்கள் அடிப்படை வசதிகளின்றிச் சிரமம்

வெள்ளாங்குளம்,ஏப்.4

நாச்சிக்குடாக் கரையோரக் கிராமத்தில் குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்கள் அடிப்படைச் சுகாதார வசதிகள் அற்ற நிலையில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

பல வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து கடற்கரையை அண்டிய பகுதிகளில் குடியிருப்பை அமைத்து இந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

கடற்கரைகளில் கொட்டப்படும் மீன் கழிவுகளாலும் நெருக்கமாக அமைந்துள்ள குடியிருப்புகளாலும் இவர்கள் சிரமப்படுகின்றனர்.

அத்துடன், இம்மக்களுக்கு மலசலகூடங்கள் இல்லாமையால் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதுடன் தொற்றுநோய்களும் ஏற்படும் அபாயமுள்ளது.

இம்மக்கள் இடம்பெயர்ந்து நாச்சிக்குடா கிராமத்தில் குடியேறி பல ஆண்டுகள் கடந்தபோதும் இவர்களுக்கு வீட்டுத் திட்ட உதவிகள் இதுவரை வழங்கப்படவில்லை.

காணிகள் இல்லாமையே இதற்குக் காரணம் எனச் சம்பந்தப்பட்ட தரப்பினர் கூறுகின்றனர்.

பொதுக்கிணறுகளும் தேவைகேற்றவாறு அமைக்கப்படாமையால் மக்கள் பெரும் சிரமப்படுகின்றனர்.

(த-415-202) (24)

# நாட்டுப்பற்றாளர் குடும்பங்களுக்கு!

கிளிநொச்சி,ஏப்.4

தமிழீழ போராட்டத்திற்கு உறுதுணையாக நின்று சாவடைந்த நாட்டுப்பற்றாளர்கள் அனைவரையும் நினைவுகூரும் முகமாக வெளிமாவட்டங்களிலிருந்து வந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தங்கியுள்ள நாட்டுப்பற்றாளர் குடும்பங்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பிரதேசத்திற்குட்பட்ட அரசியல்துறைப் பிரதேசச் செயலகங்களில் பதிவினை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறையினர் கேட்டுள்ளனர்.

(த) (24)

## அக்கராயன் பகுதியில் 'தீ பரவட்டும்' தெருநாடகம்

கிளிநொச்சி,ஏப்.4

அக்கராயன் பிரதேசமெங்கும் சமகால அரசியல் நிலைப்பாட்டினை விளக்கும் வகையிலான 'தீ பர்வட்டும்' எனும் தெருவீதி நாடகம் இடம்பெற்றுவருகிறது. இந்த நாடகத்தை புதுவை அன்பன் நெறியாழ்கை செய்துள்ளார்.

இந்த நாடகத்தின் மூலம் சமகால அரசியல் நிலைப்பாடு குறித்தும் மக்களின் போராட்ட உணர்வு எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றியும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-307)(27)

# கால்நடைகளைக் கட்டி வளர்த்தால்தான் சிறுதானியச் செய்கை மேற்கொள்ளலாம்

## அக்கராயன் பகுதி விவசாயிகள் விசனம்

பரந்தன்,ஏப்.4

அக்கராயன் பிரதேசத்தில் கால்நடைக் கட்டுப்பாட்டை ஒழுங்காக நடைமுறைப்படுத்தினால் சிறுதானியப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளமுடியும் என்று விவசாயிகள் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2005 - 2006 பெரும் போகத்தில் அக்கராயன், ஸ்கந்தபுரம் பகுதியில் பெருமளவான நெல்வயல்களில் நெற்செய்கை மேற்கொள்ளபடவில்லை. எனவே, அங்கு சிறுதானியப் பயிர்ச் செய்கையையாவது மேற்கொள்ளலாம் என்றால் அதற்குக் கால்நடைகளால் பெரும் தொல்லை ஏற்படுகிறது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்குப் பலர் முயற்சி செய்தபோதும் கட்டாக்காலிகளால் அந்த முயற்சி பலனளிக்காமல் போய்விட்டதாகவும் கூறப்பட்டது.

கால்நடைகளை வளர்ப்பாளர்கள் அவற்றைக் கட்டி வளர்க்கவேண்டும். அல்லது ஆள் வைத்துப் பராமரிக்கவேண்டும். இரண்டும் இல்லாதவிடத்து சிறுதானிய உற்பத்தி மேற்கொண்டால் கால்நடைகள் பயிர்களை அழித்துவிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடைக் கட்டுப்பாடு சீராக இல்லாவிடில் சிறுதானியச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் வீணாக நட்டமடைய வேண்டி வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்களை வைத்திருப்பவர்கள் சரியான முறையில் கால்நடைக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்தினால் அக்கராயன் பிரதேசத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளமுடியும் என்று விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(த-307) (24)

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் இன்று விளக்குவைப்பு; 11ஆம் திகதி பொங்கல்

கிளிநொச்சி,ஏப்.4

சரித்திரப் பிரசித்திபெற்ற கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் பெருவிழா எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

இதனை முன்னிட்டு இன்று விளக்குவைத்தல் நிகழ்வு இடம்பெறும். இன்று தொடக்கம் பொங்கல் தினம் வரை விசேட பூசைகள், அபிஷேகங்கள், ஆராதனைகள் என்பன இடம்பெறவிருக்கின்றன.

வழமைபோல் இம்முறையும் புளியம்பொக்கணை நாகதம்பிரானுக்கு வெகுசிறப்பான முறையில் பொங்கல் விழாவை நடத்துவதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இன்றுமுதல் ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கான தாகசாந்தி நிலைங்களை அமைப்பதற்கு கரைச்சி வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. இம்முறையும் பொங்கல் விழாவுக்கு ஏராளமான பக்தர்கள் கூடுவார்கள் என்பதால் ஆலயச் சூழலில் சுகாதாரச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தமிழீழ சுகாதார சேவையினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

(த-307-402) (24)

## கிராஞ்சியில் மாலை நேரக் கல்வி

வெள்ளாங்குளம்,ஏப்.4

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராஞ்சி பொதுநோக்கு மண்டபத்திற்கு அருகில் இவ்வூர் பெற்றோர்களும் பழைய மாணவர்களும் இணைந்து சுமார் 40 அடி நீளமான கொட்டகை ஒன்றை அமைத்து மாலைநேரக் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இப்பிரதேசத்தில் இவ்வாறான மேலதிக கல்விச் செயற்பாடுகள் எவையும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் பற்றாக்குறை, கட்டடப் பற்றாக்குறை, தளபாடப் பற்றாக்குறை போன்ற குறைபாடுகளுடன் இயங்கும் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் முழுக்க முழுக்க பாடசாலைக் கல்வியையே நம்பியிருக்கின்றனர்.

அரசோ, அரச சார்பற்ற நிறுவனங்களோ முன்வந்து இவர்களது கல்வி வளர்ச்சிக்கான மேலதிக தேவைகள் பூர்த்தியாவதற்கு தங்களாலான உதவிகளைச் செய்யவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(த 415)

## சுயதொழிலுக்கு மானியம்

பூநகரி உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பூநகரி, முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் சிறுவர் பாதுகாப்பு நிதிய நிதி உதவியுடன் பூநகரி, முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத்தில் கடந்த 27ஆம் திகதி 36 குடும்பங்களுக்கு மானியமாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. வருமான அதிரிகரிப்புத் திட்டத்தில் ஆடு வளர்ப்பு, பசு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, விவசாயம் மற்றும் சிறுகைத்தொழில் என்பனவற்றில் இந்த மானியம் வழங்கப்பட்டது.

(த-415)(24)

## மன்னாரில் மக்கள் பயிற்சி

மன்னார், கூராய் கிராமத்தில் மக்கள் கட்டுமானப் பயிற்சி ஆரம்பமாகியுள்ளது.

கப்டன் காசிப்பிள்ளை பயிற்சிப் பாசறையின் முதலாவது அணிக்கான பயிற்சி கடந்த 26ஆம் திகதி ஆரம்பமானது. இந்த நிகழ்வு பயிற்சி ஆசிரியர் இனியவன் தலைமையில் இடம்பெற்றது.

(த-307) (27)

## வங்கிக் கிளை இடம்மாற்றம்

புதுக்குடியிருப்பு, ஏப்.4

புதுக்குடியிருப்பில் இயங்கிவரும் மக்கள் வங்கிக்கிளை இடமாற்றப்பட்டதுடன் அங்கு நகை அடகு சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு மாத்தானன் வீதியில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் இயங்கிவந்த கிளை, புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியிலுள்ள டாக்டர் வேணுகாந்தன் கட்டடத் தொகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

(த-353) (27)



இராணுவ நெருக்கடிகள் காரணமாக இடம்பெயர்ந்து வன்னியில் அக்கராயன், ஆனைவிழுந்தான், வன்னேரி, ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனத்தின் உதவியுடன் தலா மூவாயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்கள் சமீபத்தில் வழங்கப்பட்டன. இந்தப் பொருள்கள் வழங்கும் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

(படங்கள்: ச.உதயசங்கர், வெள்ளாங்குளம் செய்தியாளர்)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

48 XXXX தொடரிலக்கமுடைய லங்கா அசோக் லேடன் லொறி Super Tusker (கென்டேனர் Body) விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 0776701340 (48916)

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்த கடை ஒன்றும் நாவலர் வீதியில் இரண்டு மாடிக் கட்டடத்தில் அமைந்த கடைக் கட்டடத்தொகுதியும், காணித்துண்டும். கஸ்தூரியார் வீதியிலுள்ள கடை ஒன்றும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கனகசபை, தர்மகுலசிங்கம் இல.332, ஆஸ்பத்திரி வீதி, (மரக்கறிச் சந்தைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (மாலை 3 மணி தொடக்கம் 6 மணிவரை) (48673)

## காணி விற்பனைக்கு

இல.29, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் சகல வசதிகளுடனும் கூடிய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T.p.:0776745812, 0776198191 (48883)

## வாடகைக்கு அல்லது விற்பனைக்கு

வேம்படிச் சந்திக்கு அருகில் முதலாம் குறுக்குத் தெரு இல.175 இல் அமைந்துள்ள 9அறைகளுடன் கூடிய சகல வசதியும் கொண்ட மேல் மாடிவீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K.கோபால், TP:.077 6366020, 021 4591883. (48910)

## தவறிவிட்டது

முழங்காவிலைச் சேர்ந்த பா.பாலேஸ்வரன் என்பவருடைய தே.அ.அட்டை இல. (570362186V) மற்றும் ஆவணங்கள் அடங்கிய கறுப்பு நிற பாக் பரமேஸ்வராச்சந்திக்கும் திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 635, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளவும். 0779045041 (48920)


FAIR PHAMA (PVT) LTD

இருதயத்தில் அடைப்புகள்

இரத்த நாளங்களில் உள்ள கல்சிய படிமங்களை அறுவை சிகிச்சையின்றி ஆயுர்வேத மூலிகை மருந்துகளால் கரைக்க முடியும்!

நெஞ்சுவலி நீங்கிவிடும்.




அதிக விலையற்ற
ஆயுர்வேத மாத்திரைகள்
இலவச ஆலோசனை
Avaliable Online

1C, Level 5/East Tower, World Trade Centre, Col. 01.
Tel: 0094-11-5517897, 5551879, 5558442
Fax: 5517756 E-mail: fppvtl@lankabellnet.com
Website: www.fppvtl.org
A BOI Approved & ISO 9001-2000 QMS Certified Company


## ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10, 11 ஆகிய வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாடசாலை மட்டக் கணிப்பீட்டு செயலமர்வுகள் நடைபெற்றுவருகின்றன.

ஒவ்வொரு பாடத்திற்கும் இரண்டு நாள்கள் பயிற்சி வழங்கப்படவுள்ளன. ஆசிரியர்கள் தாங்கள் கற்பிக்கும் பாடங்களின் பாடநூல்களைக் கொண்டு வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 8, 9ஆகிய திகதிகளில் தொழில்நுட்பப் பாடமும் 10, 11 திகதிகளில் சமூகக்கல்வி பாடமும் 15, 16 ஆகிய திகதிகளில் சமயபாடமும் 17, 18 ஆகிய திகதிகளில் கணிதபாடமும் 19, 20 ஆகிய திகதிகளில் விஞ்ஞான பாடமும் செயலமர்வில் இடம்பெறும். இச்செயலமர்வுகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடை பெறும்.

இதனைவிட சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 10, 12 ஆம் திகதிகளில் ஆங்கில பாடம் குறித்தும் 17, 18 ஆகிய திகதிகளில் அழகியற்கல்வி பாடம் குறித்தும் செயலமர்வுகள் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-117)(32)

## தியான வகுப்புகள்

கோண்டாவில்,ஏப்.4 மட்டுவில் இந்து மன்ற அனுசரணையுடன் சிவலிங்க யோககேந்திரா நிலையம் நடத்தும் யோகாசன தியான வகுப்புகள் எதிர்வரும் 20ஆம் திகதி சாவகச்சேரி வீதி மட்டுவிலில் உள்ள மட்டுவில் இந்து மன்றத்தில் நடைபெறும் (த-49)(21)


## உடன் தேவை

- அரச அங்கீகாரம் பெற்ற மருந்தாளர் (Pharmasist)
- பயிற்றப்பட்ட மருந்து விற்பனையாளர்
- முகாமையாளர், காசாளர்
- பயிலுநர்கள் (பழகவிரும்புபவர்கள்)

யாழ் மருந்தகம் (WESCO)
470 (250) மருத்துவமனை வீதி,
யாழ். T.P. 3188
(சி-48684) (21.17.14)



## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

05-04-2006 - 11-04-2006

முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!
சக்தி குறைவு ஞாபக மறதி பயம் நடுக்கம் நித்திரைக் குறைவு ஆண்மைக் குறைவு நீரிழிவு நோய் என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்).
(சி-48687)(32.15.14)


## 45 ஆம் நாள் நினைவலைகள்

### திருமதி தவமணி சிறீகாந்தா

*ஆறாத் துயர் தந்து*
*மீளாத் துயில் கொண்டாலும்*
*மாறாது உமது பாசம்*
*ஈடற்ற இழப்பதனை*
*விழிதனிலே பிரிந்தாலும்*
*எந்நாளும் எம்முள்ளே*
*உத்தமியே ஒளிர்கின்றீர்!*

*உமது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:*

கச்சாய் வடக்கு, கொடிகாமம்

குணா அண்ணன் (*சகோதரன்*)
சின்னக்கா (*மைத்துனி*)
ஐந்தூரி (*மருமகள்*)

(48932)(21.15.14)

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 19 - 06 - 1942



ஆண்டவன் அடியில் 25 - 03 - 1996

### அமரர் முருகேசு பாலசிங்கம்

*கண்ணீரில் பத்தாண்டுகள் கரைந்து மறைந்ததப்பா*
*கண்முன்னே நீங்களில்லை எம்மோடு உறவாட*
*எண்ணாத நாளில்லை இதயத்தில் எப்போதும்*
*உங்களுடைய நினைவுகளே எமையிங்கு ஆளுதப்பா*
*இறுதிவரை எம்மோடு சேர்ந்திருப்பீர்கள் என்றிருந்தோம்*
*இடை நடுவே தவிக்கவிட்டு ஏன் அப்பா போனீர்கள்*
*நினைவுகளில் வேகுகின்ற நெஞ்சங்கள் இங்கிருக்க*
*கனவாகிப் போனதென்ன? காவியமாய் ஆனதென்ன*
*கூடு கலைந்த குருவிகளாய் நாங்களிங்கு*
*ஓடி மறைந்தாலும் உயிருள்ள நாள் வரைக்கும்*
*கண்ணுக்குள் நின்றாடி கனவுகளில் தோன்றியெங்கள்*
*எண்ணமதில் வாழ்ந்திடுவீர்.*

எம்முயிர் உள்ளவரை இறைவனடி சேர்ந்தாலும் உறுதுணையாய் இருந்து நீங்கள் வழிநடத்தவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பா.யோகமலர்,
118/2, சிவராச வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(48939)(32-21-17.14)

## கௌரவிப்பு விழா

நவக்கிரி மாணிக்கப்பிள்ளையார் தேவஸ்தானம்

ஈழ நல்லூர் ஆஸ்தான வித்வான் ஸ்வரநாத ஸங்கீரணி

**N. ராஜன்** (இராஜேஸ்வரன் - நாதஸ்வரம்)

அவர்கள் பொன்னாடை போர்த்து தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படுவார்.

இடம்: நவக்கிரி மாணிக்கப் பிள்ளையார் ஆலயம்
நேரம்: இரவு 10 மணி
காலம்: இன்று (04.04.2006)

(48936)(32-21.17.14)

பூங்காவன இளைஞர்கள்.

## உள்ளம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்



முப்பது வருட ஆசிரியர்
பணியிலிருந்து ஓய்வுபெறும்

### திருமதி பானுமதி ஜெயராசா

அவர்களது சேவையைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

படித்த மாணவர்கள்.

(சி-48689)(24.21.14.17)

## 45 ஆம் நாள் நினைவில்....

திருமதி
### தவமணி சிறீகாந்தா



தோற்றம் 13-04-1963
மறைவு 19.02.2006

*எமது கோட்டையடி கிராமிய தற்சார்பு வளர்ச்சிக் கழகத்தின் முன்னைநாள் செயலாளரும் பொருளாளருமாகிய*
திரு.மு.சிறீகாந்தா அவர்களின் அன்புத் துணைவி
திருமதி **தவமணி சிறீகாந்தா**
அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

'வாழ்வைப் பாதியிலே இடைநிறுத்திக் கொண்டதனால்
வீசிய தென்றலது புயலாக மாறியதோ?
பொறுமையும் கடமையும் போற்றி நீர் வாழ்ந்து காட்டி
பொன்மகளாய் என்றும் பூவுலகில் நிலவுகின்றீர்'

*கோட்டையடி கி.த.சா.வ. கழகம்,*
கச்சாய்
ஊற்று நிறுவனம்

(48933)(21.15.14)

## மரண அறிவித்தல்



### வேலாயுதம் நல்லையா

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் தற்பொழுது கோண்டாவில், உப்புமடத்தடியில் வசித்தவருமாகிய வேலாயுதம் நல்லையா அவர்கள் நேற்று (03.04.2006) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும் கீதாவின் அன்புத் தகப்பனும் இராஜ்குமாரின் (ராசன்) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.04.2006) புதன் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*K.K.S. றோட்,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (48993)(32-21.16.17)

*தகவல்:*
கமலாதேவி (*மனைவி*)
இராஜ்குமார், கீதா (*மக்கள்*).



காரைநகர் பிரதேச செயலகம்,காரைநகர் சமுர்த்தி வங்கிச் சங்கம்,ஈழத்துச் சிதம்பர ஆலயத்தின் புதிய தேர்முட்டி ஆகியவற்றுக்கான அடிக்கல் நடும் நிகழ்வுகள் காரைநகரில் நேற்று கோலாகலமாக நடைபெற்றன.பிரதேச செயலகத்துக்கான அடிக்கல்லினை யாழ் .மாவட்ட அரச அதிபர் க.கணேஷ்,சமுர்த்தி வங்கிச் சங்கத்துக்கான அடிக்கல்லினை யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி,ஈழத்துச் சிதம்பர ஆலய தேர்முட்டிக்கான அடிக்கல்லினை ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பகுதிகளுக்குப் பொறுப்பான உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் ஆகியோர் நட்டுவைப்பதை முதல் மூன்று படங்களிலும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் ஈழத்துச் சிதம்பரம் முன்பாக ஒன்று கூடிநிற்பதனையும் அடுத்துள்ள படத்தில் காணலாம்.

(படங்கள்:காரைநகர் செய்தியாளர்)

## ஏப்ரல் மாதத்திற்குரிய நிவாரணம் விநியோகம்

இடபெயர்ந்தவர்களுக்கான இலவச உலர் உணவு நிவாரணத்தின் ஏப்ரல் மாதம் விநியோகம் எதிர்வரும் 7ஆம் திகதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்றவகையில் பல நோ. கூ. சங்கங்கள் தமக்குரிய வழங்கல் கட்டளைகளை நாளை அலுவலக நேரத்தில் யாழ். செயலகப்புனர்வாழ்வுப்பிரிவில் பெற்று நிவாரண விநியோகத்தை உரிய திகதியில் ஆரம்பிப்பதற்கான அனைத்து முன்னேற்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உதவித் திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் கேட்டுள்ளார்.(ஒ-203)

### தலையலங்காரம், பூவேலை கேக்ஐசிங்

மேற்படி பயிற்சி நெறி, யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் இலவசமாக 06-04-2006 பிற்பகல் 2.45 மணியளவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. பயிற்சி நெறியில் கலந்துகொள்ளவிரும்புவோர் 05-04-2006 இற்கு முன்னர் பாடசாலை அதிபருடன் தொடர்புகொள்ளவும்.

(48950)(18-34-49)

## கண்ணீர் அஞ்சலி

எமது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பராமரிப்பும் முகாமைத்துவம்,கட்டுமானப் பணிப்பாளருமாகிய ஏ.எம்.யெளஸி அவர்களின் அன்புத் தாயின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிறைவேற்று பொறியியலாளரும்
உத்தியோகத்தர்களும்
ஊழியர்களும்
பருத்தித்துறைப் பிரிவு.

(சி-48619)(18-34-49)


## வெளிப்புறப் படப்பிடிப்பாளர்களுக்கு ஓர் நற்செய்தி



சித்திரைப் புத்தாண்டினை முன்னிட்டு இன்று முதல் படம் பிரதியாக்கம் செய்பவர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும் என்பதனை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அன்றும் இன்றும் என்றும் தொழில் நுட்பத்துறையின் முன்னோடிகள்

ரவி டிஜிற்றல் கலர்லப் அன்ட் சுப்பலோ வீடியோ ஓடியோ சென்றர்

149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.:0212222082

(சி/48685)(24-18-34-49)



## ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த

### மெர்க்குரிப் பூக்கள்

10.30, 2.30, 6.30, 9.00. (பி.நே.)

## நாகம்ஸ் சுன்னாகம்

பிரபு, முரளி, வினித் நடித்த கலைஞரின்

### பாசக்கிளிகள்

5 ஆம் திகதி முதல் சுதேசி

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

நந்தா, தேஜாசிறி, மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த

### கோடம்பாக்கம்

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)

தினசரி நான்கு காட்சிகள்


## 45 ஆம் நாள் இதய அஞ்சலி



திருமதி தவமணி சிறிகாந்தா

'மழை தராத வானமாய்
மலர்ந்ததோ உன் வாழ்வு'

துயருறும்
நண்பர் குழாம்.

விநோபா சனசமூக நிலையம்,
விநோபா நகர்,
கச்சாய்.

(48944)
(18-34-49)

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து சுப்பிரமணியம்(மணிமாமா)



சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவருமாகிய சரவணமுத்து சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (03.04.2006)திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து-பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற திருச்செல்வநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகம்மா, கணபதிமுத்து,இராசலக்குமிப்பிள்ளை, நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கமலாசினி,பரமேஸ்வரி, யுகவதி,மகேஸ்வரி, இராஜேஸ்வரி,பரம்சோதிநாதன்,மங்கையர்க்கரசி ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிஸை மஹிந்த மலர்ச்சாலையில்(**Mahinda Florists, Mt.Lavinia**) இன்று(04.04.2006)செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 5 மணிக்கு கல்கிஸை பொது மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
K.S.இரத்தினவேல்,இல.246/6,
இனிஷியம் றோட்,தெகிவளை.
T.P.2736975, 2724814,0777 298300

(சி-48688)(18-34-49)

### திருமதி நவரெட்ணம் மாணிக்கம்

புளியங்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்ட நவரெட்ணம் மாணிக்கம் அவர்கள் நேற்று(03.04.2006)திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகளும் தில்லையம்பலம் - சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகளும் நவரெட்ணத்தின் அன்பு மனைவியும் ஜெயமங்களசிரோன்மணி (வவா), லீலாதேவி, லலிதாதேவி, லாதாதேவி, ஜெயபாலன்,ஜெயச்சந்திரன், றஜ்கலா, விஜிகலா ஆகியோரின் பாசமிகு தாயும் பாலசுப்பிரமணியம், கணேசலிங்கம், ஜெகநாதன், புண்ணியமூர்த்தி, நிலாஜனி, றஞ்சினி, ஜெயசீலன், சர்வேஸ்வரன்ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான சண்முகம், இராசரெத்தினம், நாகரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான திருகாம்பி , இராஜரெத்தினம் மற்றும் திலகவதி, செல்லம்மா, அன்னபூரணம், சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற அருளம்பலம் மற்றும் சிவபாதசுந்தரம், காந்தமலர்,காந்திமதி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் நிரோஜன், நிவாகர், நிதர்சன், டாலி, கஜீபன், மீரா, தசாங்கனி, நவீனா, காலஞ்சென்ற சாஜினா மற்றும் நர்மிதா, கம்சாஜினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நடராசாவித்தியாசாலை அருகில்,
புளியங்கூடல். (48952)(18-34-49)

தகவல்:
தி.நவரெட்ணம்(கணவர்).


## யாழ். நகரில் நவீன் வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக்காட்சியகம்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நவநாகரீக ஆடைத் தெரிவுகளுக்கு நாடுங்கள்



# Style Park

Perfect Collection

# ஸ்ரைல் பார்க்



அனைத்து வகையான கடன் அட்டைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்

MasterCard VISA

முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சியறையில் யாழ். நகரில் குறைந்த விலையில் மங்கையர் மனம் நிறைந்த ரகங்கள், நிகரில்லாத்தரங்கள்

அழகிய புடைவைத் தினுசுகளின் றெடிமேட் சாம்ராஜ்ஜம்

No. 171, K.K.S. Road, Jaffna. T.P: 8383

இல. 171, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் உரிய நஷ்டஈடு கிடைக்கும்

## ஜனாதிபதிமஹிந்த அறிவிப்பு

கொழும்பு,ஏப்.4

நாட்டில் இடம்பெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 1981 ஆம் ஆண்டு தொடக்கம் 1984 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதி யில் இடம் பெற்ற வன்செயல்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கு இந்த நஷ்டஈடு வழங்கப்பட வுள்ளதாகவும் இதன் முதற்கட்டமாக இன்று செவ்வாய்க்கிழமை 100பேருக்கான நஷ்டஈடு வழங்கப்படுவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். நஷ்டஈடு கொடுப் பனவுக்கான பயனாளிகள் யாழ்பாணம், மட்டக்களப்பு, மாத்தளை, பதுளை, கண்டி கொழும்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது (எ-13)

# திருமலை சபைகளுக்கு தலைவர்கள் நியமனம்

திருமலை,ஏப். 4

திருகோணமலை நகரசபைத் தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுப்பிரமணியன் கௌரிமுகுந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை தலைவராக தங்கவேலமுதம் காந்தரூபனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நியமித்துள்ளது.

திருகோணமலை நகரசபை பிரதித் தலைவராக கந்தசாமி செல்வராஜாவும், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை பிரதித் தலைவராக வெள்ளைத்தம்பி சுரேஸ் குமாரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனங்கள் தொடர்பான சிபார்சை எதிர்வரும் ஏப்ரல் 7ஆம் திகதிக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா தேர்தல் ஆணையாளருக்கு தெரியப்படுத்துவார் என்றும் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன. (எ-க)

## வந்தார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேபோல் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலை வரையும் போவர் நேற்றிரவு சந்திக்க ஏற்பா டாகயிருந்தது.

நாளை வன்னிக்குச் செல்லவுள்ள போவர் நாளை மறுதினம் நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் சகிதம் கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)



# வம்பொட்டாவும் சகாவும் நேற்று மர்ம நபர்களினால் சுட்டுக்கொலை

கொழும்பு, ஏப்.4

பாதாள உலகக் கோஷ்டியின் மிகப் பிரபல புள்ளியாகக் கருதப்படும் 'வம்பொட்டா' எனப்படும் கமகே அஜித் வசந்தவும், அவரது சகாவான சுமேத என்பவரும் நேற்றுக்காலை அவிசாவளைப் பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பாதாள உலகக் கோஷ்டியின் மற்றுமொரு புள்ளியான 'ஆமிமல்லி' நேற்று முன்தினம் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப் பட்டு, 24 மணி நேரத்திற்குள் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாதாள உலகக் கோஷ்டியின் தலைவர்களில் ஒருவரான வம்பொட்டாவும் அவரது சகாக்கள் நான்கு பேரும் நேற்று அதிகாலை சீதுவையிலிருந்து அவிசாவளைக்கு டொல்பின் வான் ஒன்றில் சென்றுகொண்டிருந்தனர். அவிசாவளை கொஸ்கம பிரதேசத்தில் அவர்கள் சென்று கொண்டிருந்தபோது இனந்தெரியாத கோஷ்டி ஒன்று திடீர்த் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது எனக் கூறப்படுகின்றது.

இதில் காயமடைந்த வம்பொட்டா எனப்படும் கமகே அஜித்தும், அவரது சகாவான சுமேத என்பவரும் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் உயிரிழந்தனர். குறிப்பிட்ட வானில் சென்று கொண்டிருந்த களுவா எனப்படும் மற்றுமொரு நபர் அவிசாவளை வைத்தியசாலையில் பொலீஸ் காவலுடன் சிகிச்சை பெற்று வருகிறார்.

நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற இடத்திலிருந்து கைக்குண்டு மற்றும் துப்பாக்கிகளைப் பொலீஸார் மீட்டுள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து அவிசாவளைப் பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (எ-க)

## விமல் வீரவன்ஸ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்தே ஜே.வி.பி. போட்டியிட வேண்டுமென்று கட்சிக்குள் வலியுறுத்திவந்தவர் விமல் வீரவன்ஸ.

தேர்தல் முடிந்த கையோடு அவர் ஜனாதிப்தி மஹிந்தவைச் சந்தித்திருப்பது ஜே.வி.பிக்குள் சலசலப்பை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது. (எ-க)

# கடத்தப்பட்ட பணியாளரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய யாழ்.மாவட்டக் கிளை இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக பகிஷ்கரிப்பு போராட்ட ஏற்பாட்டாளர்கள் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஜனவரி மாதம் பணி தொடர்பாகப் பயணம் செய்துகொண்டிருந்தவேளையில் வெலிக்கந்தை இராணுவ முகாமிற்கு அருகில் வைத்து திட்ட ஒருங்கிணைப்பாளரும் 6 பணியாளர்களும் கடத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மனிதமேம்பாட்டு நிறுவனங்கள், சமூக அமைப்புகள், பொது நிறுவனங்கள் என்பனவற்றால் எழுப்பப்பட்ட குரல்களுக்கு அரசோ, படைத்தரப்போ செவி சாய்க்கவில்லை.

இதனால் எவ்வளவோ பணிகள் முடக்கப்பட்டுள்ளன. பணியாளர்கள் கடத்தப்பட்டதை நிலையம் வன்மையாகக் கண்டிப்பதுடன் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை நடத்தி விடயத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)

# பொலீஸ்மா அதிபரை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளாகியிருக்கும் அதிபரை பதவி நீக்கவேண்டும் என்ற கோரிக்கையும் வலுவடைந்து வருகிறது.

இது தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவின் பிரசாரச் செயலாளர் நிஸாந்த வர்ணசிங்க கருத்துத் தெரிவிக்கையில் கூறியிருப்பதாவது :-

நாட்டில் ஒட்டுமொத்த பொலீஸ் துறையும், லஞ்ச ஊழலில் சிக்கியுள்ளது. பல பொலீஸ் உயர் அதிகாரிகள் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர். தற்பொழுது பொலீஸ்மா அதிபரின் நடவடிக்கைகளுக்கும் விமர்சனத்துக்குரியனவாக அமைகிறது.

நாட்டின் இரண்டாவது குடிமகனாகவிருந்த அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷமீது அவதூறை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு இவர் உடந்தையாக இருந்துள்ளார். ஒரு கட்சிக்குச் சார்பாக - பக்கச் சார்பான வகையில் அவர் செயற்பட்டுள்ளார் என்பது தற்பொழுது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் உடனடியாகப் பொலீஸ்மா அதிபர் மீதான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார் வர்ணசிங்க. (எ-க)

# இராணுவத்தில் முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது அகில இலங்கை முஸ்லிம் சபையானது மறைந்த சேர். ராசிக் பரீத்தினால், 1921ஆம் ஆண்டு ஆரம்பித்துவைக்கப்பட்டது. இந்த அமைப்பில் முஸ்லிம் சமூகத்தின் பல்கலைக்கழக கல்விச் சமூகம், அரச மற்றும் தனியார்துறை தொழில் வல்லுநர்கள், வர்த்தகர்கள் அனைவரும் இணைந்து செயற்படுகின்றனர். எம்மைப் பொறுத்தவரை தனி முஸ்லிம் படையணி அமைக்கப்படுவது அவசியமற்ற ஒன்றெனவே கருதுகிறோம்.

கிழக்கு மாகாண முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்காக இந்தப் படையணி அமைக்கப்படும் என்று அரசு கூறுகிறது. இது எதிர்காலத்தில் சாத்தியமான ஒருவிடயமல்ல. முஸ்லிம்கள் அனைத்து மாகாணங்களிலும் அனைத்து மதத்தவர்களுடன் இணைந்து வாழவே விரும்புகின்றனர்.

எங்களுக்குத் தெரிந்தவரையில் எந்தவொரு நாட்டின் இராணுவத்திலும் தனி ஒரு இனத்துக்காக அல்லது சமூகத்துக்காக ஒரு படையணி உருவாக்கப்பட்டதாக வரலாறு இல்லை. இந்நிலையில் பல்லின கலாசாரம், பல்லின மதங்கள் உள்ள எமது நாட்டில் இராணுவத்துக்கான ஆட்சேர்ப்பானது இனங்களின் அடிப்படையில் இருக்கத்தேவை யில்லை என்பதே எமது கருத்தாகும். எனவே, இவ்விடயத்தில் தாங்கள் கூடிய கவனம் செலுத்தி இந்த நடவடிக்கையை உடன் நிறுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன் - எனத் தெரிவித்துள்ளார். (எ-க)

# இத் தேர்தலில் தோல்வி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லையா?

- இவ்வாறு கேள்வி எழுப்பினார் ஜே.வி.பியின் தலைமைச் செயலாளர் ரில்வின் சில்வா.

நடந்து முடிந்த தேர்தல் குறித்து ஜே.வி.பி. நேற்று கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியது. அதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு கூறினார் ரில்வின் சில்வா. அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"உள்ளூராட்சித் தேர்தலில் நாம் தோல்வியடையவில்லை. தேவையான அளவு வாக்குகளைப் பெற்றுள்ளோம். உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றவில்லை என்பதற்காக எமது வாக்குப்பலம் குறைந்து விட்டது என்று கருதிவிடக் கூடாது. பொதுத் தேர்தலொன்று வருமாயின் நாம் அதனையும் எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கிறோம்.

சில இடங்களில் நாம் ஐக்கிய தேசியக் கட்சியைப் பின்தள்ளி விட்டுபிரதான எதிர்க் கட்சி என்ற அந்தஸ்துக்கு வந்திருக்கிறோம். ஜனாதிபதியின் அம்பாந்தோட்டை தேர்தல் மாவட்டத்தின் திஸ்ஸமஹாராம பிரதேச சபையை மீண்டும் கைப்பற்றியமை எமது வெற்றிக்கு மேலும் முதன்மை சேர்க்கிறது.

- இவ்வாறு கூறினார் ரில்வின் சில்வா - ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, விஜித ஹேரத் ஆகியோரும் இந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர். (எ-க)

# கட்டுநாயக்காவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டத் தலைவர்களின் - தளபதிகளின் - பயணப் பாதுகாப்புப் பற்றிய விடயத்தை அன்ரன் பாலசிங்கம், அமைச்சர் சொல்ஹெய்மிடம் சுட்டிக்காட்டியிருந்தார்.

கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாகப் புலிகளின் தலைவர்கள் பயணம்செய்வதற்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை இலங்கை அரசும், ஜனாதிபதியும், நோர்வேத் தரப்பும் தர முடியாவிட்டால் மாற்று யோசனையாக கடல் விமானம் மூலம் புலிகளின் குழு வன்னியிலிருந்து புறப்படலாம் என்ற திட்டத்தையும் இந்தச் சந்திப்பின்போது புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம், நோர்வே அமைச்சருக்கு முன்வைத்தார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

தற்போதைய அமைதி முயற்சிகளின் ஆரம்பக் கட்டத்தில் - 2002 ஆம் ஆண்டு முற்பகுதியில் - முதற் சுற்றுப் பேச்சு தாய்லாந்தில் ஆரம்பமாக முன்னர் - லண்டனில் இருந்து புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் கடல் விமானம் மூலமே வன்னி வந்து திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

விமானம் மூலம் மாலைதீவின் தலைநகர் மாலேக்கு வந்த பாலசிங்கம் தம்பதியினர் அங்கிருந்து கடல் விமானம் ஒன்றில் புறப்பட்டு வன்னியில் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் - இரணைமடுக் குளத்தில் இறங்கினர். நோர்வே அனுசரணையாளர்களும் இப்பயணத்தின் போது உடனிருந்தனர்.

இதே மார்க்கத்திலேயே பாலசிங்கம், அப்போது, லண்டன் திரும்பினார்.

கட்டுநாயக்கா விமானத் தளம் ஊடாகத் தமது தலைவர்களின் பயணத்துக்கு பாதுகாப்பு உத்தரவாதம் தர சம்பந்தப்பட்ட தரப்புகள் பின்னடிக்குமானால் கடல் விமானம் மூலம் புறப்பட்டு, பயணம் செய்து ஜெனீவாப் பேச்சில் பங்கு பற்றவும் தாம் தயார் என்று புலிகள் கோடி காட்டியிருப்பதாகத் தெரிகிறது.

இவ்விடயத்தில் ஒரு முடிவு எடுப்பது குறித்து அரசபாதுகாப்பு வட்டாரங்கள் ஆராய்ந்து வருவதாகவும் கூறப்பட்டது. (உ)


மாபெரும் வழிகாட்டல் கருத்தரங்கு

நாடகமும் அரங்கியலும்
காலம் 8 தொடக்கம் 12 வரை
நேரம்: சனி முற்பகல் 10 மணி
கருத்துரை வழங்குவோர்
திரு.T.J. சுதன் B.A. (Hons)
திரு.கணேஸ் B.A. (Hons)

BEACON யாழ்நகர்

முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.



Vacation @ AIMS

Work as you like
Handle as you like
Create as you like
Gain as you like
Play as you like

Visit Before 06-04-2006

Director, AIMS, Jaffna
#118, பலாலி வீதி, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.

Center for FOSS & LAMP


# அத்தியாவசியம் அற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கூறியதாவது:-

குடாநாட்டுக்கு தற்போது 32 மெகா வாட்ஸ் மின்சாரம் தேவைப்படுகிறது. ஆனால் எமக்குக் கிடைக்கும் மின்சாரத்தின் அளவு 28 மெகா வாட்ஸ்தான்.

மின்சார சபையுடன் செய்துகொள்ளப் பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் அக்றிக்கோ (Aggriko) என்ற நிறுவனம் 16 மெகா வாட்ஸ் மின்சாரத்தையும், கூல் எயார் நிறுவனம் 12 மெகாவாட்ஸ் மின்சாரத்தையும் வழங்குகின்றன. மொத்தமாக 28 மெகாவாட்ஸ் மின்சாரம்தான் கிடைக்கிறது.

குடாநாட்டில் 85 ஆயிரம் மின் பாவனையாளர்கள் இருக்கின்றார்கள். மொத்தமாக 32 மெகாவாட்ஸ் மின்சாரம் கிடைத்தால்தான் குடாநாட்டில் மின்தடை இல்லாமல் தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்க முடியும். 4 மெகா வாட்ஸ் மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கின்றது.

இந்தப் பற்றாக்குறை தொடர்பாக எமது தலைமையகத்துக்கும் அமைச்சுக்கும் தெரியப் படுத்தியிருக்கின்றோம்.

எனினும் பாவனையாளர்கள் இயன்றவரை மின்சாரத்தை மீதப்படுத்தி - அவசியமற்ற தேவைகளுக்கு மின்னை செலவிடாமல் இருப்பதன் மூலம் இப்போது கிடைக்கும் மின்சாரத்தையே தடையின்றி 24 மணி நேரமும் கிடைக்கக்கூடிய வகையில் பாவிக்க முடியும்.

இரவு 7 மணி தொடக்கம் 9 மணி வரை மின்பாவனையைப் பொதுமக்கள் மட்டுப்படுத்த வேண்டும். இவ்வேளையில் அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்காகப் பாவிக்கும் மின் குமிழ்களில் ஆகக் குறைந்தது. இரண்டையேனும் நிறுத்திவைத்து மின்சாரத்தை மீதப்படுத்த வேண்டும். ஒவ்வொருவரும் மனம் ஒத்து இப்படிச் செய்தால் தினமும் 6.8 மெகாவாட்ஸ் மின்சாரம் மீதப்படுத் தப்படும்.

எமக்குத் தற்போது பற்றாக்குறையாக இருப்பதோ வெறும் 4 மெகாவாட்ஸ்தான். இப்படி அவசியமற்ற மின் குமிழ்களை அணைத்து வைப்பதன் மூலம் 6.8 மெகா வாட்ஸ் மிச்சப்படுத்தப்படுகின்றபோது எமக்கு 2.8வாட்ஸ் மின்சாரம் மேலதிகமாக - தேவைக்கு மிச்சமாக - கிடைக்கும்.

அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் குடாநாட்டில் 24 மணிநேரமும் தடைகள், இடையூறுகள் ஏதுமின்றி மின்சாரத்தை வழங்க முடியும்.

இதனைவிட மின்சக்தி மூலம் சமையல், நீர் இறைத்தல், ஒட்டு வேலைகள் செய்தல் போன்றவற்றையும் இத்தருணத்தில் பாவனையாளர்கள் தவிர்க்க வேண்டும்.

இந்த நடைமுறைகளை மின்பாவனையாளர்கள் கடைப்பிடிக்கத் தவறினால் இரவு 7 மணிமுதல் 9 மணிவரையிலான நேரத்தில் மின் வெட்டை அமுல் படுத்துவது தவிக்க முடியாததாகிவிடும் என்று அவர் கூறினார். (த-7)(30)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.04.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை,
2006 மே

வெளியீடு 01

## மாதிரி வினாப்பத்திரம்

## புவியியல் II பகுதி I

ஒரு மணித்தியாலம்

திரு. P.S.குமரன் B.A. (Hons) யாழ்.


**அறிவுறுத்தல்கள்-இப்பகுதியிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை தருக. ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் வழங்கப்படும்.**

01 சூரியனின் நண்பகல் கதிர்கள் மத்திய கோட்டில் விழும் காலம்
i) ஜூன் -21, டிசெம் -22 ii) ஜூன் -21, மார்ச் -21
iii) மார்ச் -21, செப் -23 iv) செப் -23, டிசெம் -22

02 பின்வருவனவற்றுள் எது ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பாவில் அதி உயரமான மலைச்சிகரத்தைத் தருகிறது
i) எவரெஸ்ற், கிளிமஞ்சரோ, எல்ப்ரஸ் ii) எவரெஸ்ற், கிளிமஞ்சரோ, அன்னபூரண
iii) எவரெஸ்ற், எல்ப்ரஸ், கென்யா iv) எவரெஸ்ற், கிளிமஞ்சரோ, கென்யா

03 உலகில் புவியதிர்ச்சியும், எரிமலைகளும் அடிக்கடி நிகழ்வது
i) பிலிப்பைன்ஸ் ii) பாகிஸ்தான் iii) ஜப்பான் iv) ஐ.அமெரிக்கா

04 **குறை** என்பது
i) பாறைகள் உடைவுத்தளத்தின் வழியாக அசைந்து பெயர்தல்
ii) பாறைகள் மடிப்புக்குள்ளாதல் iii) பாறைகள் பிரிந்தழிதல்
iv) பாறைகள் கரைசலாக்கத்திற்குட்படுதல்



05 மேலுள்ள படத்தில் காற்றின் செய்முறை குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் சரியான விடைத்தொகுதி
i) வடஅரைக்கோளத்தில் முரன்சூறாவளியும், சூறாவளியும்
ii) வட, தென் அரைக்கோளங்களில் முரன்சூறாவளியும், சூறாவளியும்
iii) தென் அரைக்கோளத்தில் சூறாவளியும், முரன்சூறாவளியும்
iv) வட, தென் அரைக்கோளத்தில் சூறாவளியும், முரன்சூறாவளியும்

06.உலக வனத் தினம்
i) மார்ச்- 21 ii) ஏப்ரல்- 22 iii) ஜூன்- 5 iv) செப்-23

07.இலங்கையில் நிலச்சரிவால் அதிகமாகப்பாதிப்பிற்குள்ளாகும் மாவட்டங்கள்
i) பதுளை, கண்டி, மாத்தறை, நுவரெலியா
ii) பதுளை, மொனராகல, இரத்தினபுரி, நுவரெலியா
iii) கண்டி, யாழ்ப்பாணம், மாத்தளை, காலி
iv) பதுளை, இரத்தினபுரி, நுவரெலியா,கேகாலை

08. **மக்மா** இறுகுவதனால்
i) தீப்பாறைகள் உருமாற்றத்திற்குட்படுதல் ii) தீப்பாறைகள் உருவாதல்
iii) அடையற்பாறைகள் உருவாகுதல்
iv) அடையற்பாறைகள் உருமாற்றத்திற்குட்படுதல்

09. இரும்புத்தாது அதிகமாகக் காணப்படுவது
i) பழைய பளிங்குருப்பாறைகளில் ii) மயோசின் கால அடையற்பாறைகளில்
iii) இடைக்கால அடையற்பாறைகளில் iv) உருமாறிய பாறைகளில்

10 **அசுபெத்தோசு** என்பது
i) உருமாறிய பாறைகள் ii) தள்ளற் பாறைகள்
iii) அடையற்பாறைகள் iv) தீப்பாறைகள்

11 உலக ஓசோன் தினம்
i) செப். 16 ii) நவர். 25 iii) ஏப்ரல் - 23 iv) ஜூலை - 6

12 **வளி வடிகை** என்பது
i) சாய்வுகளிருந்து குளிர்ந்த காற்று வடிந்து பள்ளத்தாக்குகளிலும், தாழ்நிலங்களிலும் திரளும் தோற்றப்பாடு
ii) வளியின் ஈரப்பதன்
iii) வளிமண்டலத்தால் புவிக்கு வெளியிடப்படும் கதிர் வீச்சு
iv) வளிமண்டலத்தில் கட்புலனாகாத நிலையில் உள்ள நீராவி

13 **கண்ட மேடை** என்பது
i) கண்டங்களின் எல்லைகளை அண்மித்த ஆழமற்றக் கடற்படுக்கை
ii) கண்டங்களின் எல்லைகளை அடுத்து, சரிந்து செல்லும் இடம்
iii) கடல்வாழ் உயிரினங்கள் அதிகமாக வாழும் இடம்
iv) கரையோரங்களையடுத்து கப்பல்கள் தரித்து நிற்கும் ஆழமான பகுதி

14 **சீவு** என்பது
i) நெடுமணற்குன்று ii) ஒரு வகை பார்கன் குன்று
iii) செம்மறியுருப்பாறை iv) தரைக்கீழ்குகை

15 கண்டபனிக்கட்டியாற்று நகர்வுடன் தொடர்புபட்ட புவிச்சரிதவியல் காலம்
i) கொலசின் காலம் ii) மயோசின் காலம்
iii) கேம்பிறியன் காலம் iv) பிளைத்தோசின் காலம்


16 **தரை மொறோண்**
i) தெளிவான பனியோடைப் படிவு ii) காற்றின் படிவு
iii) கடலலையின் படிவு iv) தரைக்கீழ் நீரின் கரைசல்

17 உலக வெப்பநிலையாக்கத்திற்கு (Global warming) எதிராகக் காபன் வரி கொண்டு வந்த நாடு
i) ஐக்கிய அமெரிக்கா ii) அவுஸ்திரேலியா
iii) நோர்வே iv) நியூஸிலாந்து

18 ஆர்டிக், அயனவலயப் பகுதியில் காணப்படும் பிரதான மண்வகை
i) பொட்சோல், இலற்றோசொல் ii) பொட்சோல், சோணோசன்
iii) இலற்றோசோல் iv) சோணோசன்

19 பனிக்கட்டியின் ஓரத்தில் விசிறி வடிவில் அகன்ற படிவாகப் படிந்திருப்பது
i) வெள்ளச் சமவெளி ii) அரிப்புச் சமவெளி
iii) வெளியடையற் சமவெளிகள் iv) பொங்கு முகம்

20 **நிலநீர்ப் பீடம்** என்பது
i) தரைக்கீழ் நீரளவு ii) நீர்த்தாங்கு படுக்கை
iii) ஊடுவடியப்படும் நீர் iv) நீர் நிரம்பிய வலயத்தில் மேற்பாகம்




21 மேலுள்ள படத்தில் A, B, எழுத்துகளால் ஓர் ஆற்றுப்பள்ளத்தாக்கின் செய்முறையை குறிப்பிடப்பட்டுள்ளது அதன் சரியான விடைத்தொகுதி
i) A பள்ளத்தாக்கு ஆழமாதலுடன் ஒப்பிடுமிடத்து அகலமாதல் மந்தம் B பள்ளத்தாக்கு அகலமாதலுடன் ஒப்பிடுமிடத்து ஆழமாதல் மந்தம்
ii) A பள்ளத்தாக்கு ஆழமாதலுடன் ஒப்பிடுமிடத்து அகலமாதல் மந்தம் B பள்ளத்தாக்கு அகலமாதலுடன் ஒப்பிடுமிடத்து ஆழமாதல் மந்தம்
iii) A பள்ளத்தாக்கு ஆழமாதலுடன் ஒப்பிடுமிடத்து அகலமாதல் மந்தம B பள்ளத்தாக்கு அகலமாதலுடன் ஒப்பிடுமிடத்து ஆழமாதல் அதிகம்
iv) A பள்ளத்தாக்கு ஆழமாதலுடன் ஒப்பிடுமிடத்து அகலமாதல் அதிகம் B பள்ளத்தாக்கு அகலமாதலுடன் ஒப்பிடுமிடத்து ஆழமாதல் மந்தம்

22 இலங்கையின் 1981 ஆம் ஆண்டு கரையோரப் பாதுகாப்புச் சட்டத்தின் பின் சராசரி உயர் நீர் மட்டத்திலிருந்து கரையோரப் பிரதேசத்தின் தரைநோக்கிய எல்லையைச் சரியாகத் தருவது?
i) 300 மீற்றர் ii) 100 மீற்றர் iii) 400 மீற்றர் iv) 150 மீற்றர்

23 இலங்கையில் எக்கடலோரப் பகுதியில் கூடுதலான தின்னலும் படிதலும் இடம்பெறுகிறன?
i) தென் கரையோரம் ii) வடமேற்கு கரையோரம்
iii) வடகிழக்கு கரையோரம் iv) தென்மேற்கு கரையோரம்

24 அயன மழைக்காடுகள் அதிகளவு அழிக்கப்படுவது
i) தென்னிந்தியாவில் ii) இலத்தின் அமெரிக்காவில்
iii) ஆபிரிக்காவில் iv) ஆசியாவில்

25 **தளர் பாறைப் படை** என்பது
i) பிரிந்தழிதலாலும், பிரிதலாலும் பெறப்படும் பாறைத் துண்டுகள்
ii) காற்றினால் கொண்டுசெல்லப்படும் பாறை
iii) பனியாற்றினால் கொண்டுசென்று கைவிடப்படும் பாறை
iv) சாய்வு நிலப் பாறை துண்டு துண்டுகளாக உடைந்து கீழ் இறங்கல்

26 **மொனாட்டுனொகஸ்** என்பது
i) அரித்துக் குறைக்கப்படாத பகுதியில் தம்மேற்பரப்பின் பொதுமட்டத்திற்கு மேலே தெளிவான தரைதோற்றமாக விளங்குவது
ii) அரித்துக் குறைக்கப்பட்ட பகுதியில் தம்மேற்பரப்பின் பொதுமட்டத்திற்கு மேலே தெளிவான தரைத்தோற்றமாகவிளங்குவது
iii) பல போல்ஜே இணைந்து உருவான பெருபள்ளமாக விளங்குவது
iv) பாலைவனத்தில் மழைநீரால் படிவுசெய்யப்பட்ட சேறு நிரப்பிய சமநிலம்

27 **தொம்போலோ** என்பது
i) பிரதான நிலத்திணிவுடன் மணற்படிவினால் இணைக்கப்பட்ட ஒரு தீவு
ii) காற்றினால் பாலைவன எல்லைகளில் படியவிடப்பட்ட நெடுமணற்குன்றுகள்
iii) பனியாற்றினால் மட்போர்வை நீக்கப்பட்ட கரடுமுரடான நிலம்
iv) ஆற்றிடையில் படிவுற்றுள்ள மணற்றடை

28 அவுஸ்திரேலியாவின் வடகிழக்கு கடற் பகுதிகளில் உருவாகும் சூறாவளி அழைக்கப்படுவது?
i) தைப்பூன்ஸ் ii) வில்லிவீலிஸ் iii) ஹரிக்கேன்ஸ் iv). பாகியஸ்

29 **நீள் குடாக் கரைக் கோடுகள** என்பது
i) கரையோரத்தில் அமிழ்ந்துள்ள நிலப்பகுதி
ii) பல பொங்குமுகங்களையுடைய கடற்கரைக்கோடுகள்
iii). பனியாற்றினால் ஏற்படுத்திய கரையோரம்
iv). அலையினால் மண் நீள் வரம்புகளாகப் படியவிடப்பட்ட கரை

30 மண் உருவாக்க காரணிகளாவன
i) தாய்ப்பாறை, காலநிலை, சேதனப் பொருளகள், அசேதனப்பொருளகள், காலம்
ii) தாய்ப்பாறை, தரைத்தோற்றம், சேதனப்பொருள், அசேதனப்பொருள்கள்
iii) தாய்ப்பாறை, தரைத்தோற்றம், படிவுவீழ்ச்சி, வெப்பநிலை, உயிரினங்கள்
iv) தாய்ப்பாறை, காலநிலை, இடவிளக்கவியல், உயிரினம், காலம்

31 "எல் நினோ" (El Nino ) தாக்கம் எனப்படுவது
i). காட்டுத் தீ ஏற்படுவது ii). கடும் குளிர் நிலவுதல்
iii). காலநிலை அனர்த்தம் iv). நிலநடுக்கம்

32 மேல்வளி மேலைக் காற்றின் முனைவு சுழிப்புச் சுற்றோட்டத்தின் மத்திய பாகத்தில் மேற்கு கிழக்குக்காக மிக வேகமாக வீசுகின்ற காற்றோட்டத்தை எவ்வாறு அழைப்பர்?
i) ஹரிக்கேன் ii) கமற்றன் iii) அருவித்தாரை iv) சாந்தா அனா

33 இலங்கையின் இரு பிரதான வன விலங்கு சரணாலயங்கள்
i) சிங்கராஜவனம், மிகுந்தல் ii) வில்பத்து, மிகுந்தல
iii) வில்பத்து, சிங்கராஜவனம் iv) யால, றக்குவானை

34 காற்றினால் மணல் அல்லது தூசு ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு கொண்டு சென்று மேற்பரப்பு சீர்ச்சாய்வாக்கப்படுவது
i) தேய்தல் ii) கொண்டு செல்லல் iii) வாரி இறக்கல iv) அரைந்து தேய்தல்

35 1996 இல் சிம்பாப்வேயில் இடம்பெற்ற மாநாடு எதைப்பற்றியது?
i) புவி வெப்பமடைவதைக் குறைப்பது பற்றி
ii) சூரிய சக்திப் பயன்பாட்டை அதிகரிப்பது பற்றி
iii) ஓசோன் பாதுகாப்பு பற்றி iv) நிலம், நீர், வளி மாசடைதல் பற்றி

36 பச்சை வீட்டு விளைவிற்குக் காரணமான வாயு எது ?
i) ஹைட்ரஜன் ii) நைட்ரஜன்
iii) கார்பன்மோனாக் ஒக்சைட்டு iv) கார்பன் டை ஒக்சைட்டு

37 படிவுவீழ்ச்சி வகைகளுள் மிகவும் அழிவைத் தரக்கூடியது?
i) தூரல் ii) ஆலி iii) மூடுபனி iv) மழைப்பனி

38 **பிஜ5ஏ** என்பது
i) உலகின் மிகப்பெரிய பனிப்பாறை ii) உலகின் மிக நீளமான கால்வாய்
iii) உலகின் மிகப்பெரிய ஈரநிலம் iv) உலகின் மிகப்பெரிய சரணாலயம்

39 இலங்கையின் வடகிழக்குக் கரையோரத்தில் காணப்படும் முருகைக்கற்பாறைகள்
i) மயோசின்காலத்தில் மேலுயர்த்தப்பட்டவை
ii) பலியோசின் காலத்தில் மேலுயர்த்தப்பட்டவை
iii) கொலசின் காலத்தில் உருவானவை
iv) கேம்பிறியன் காலத்தில் மேலுயர்த்தப்பட்டவை

40 இலங்கையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட 16 ஆவது தேசிய சரணாலயம்
i) லுணுகம்லெஹர ii) லஹிகல iii) றுகுணு iv) குமுன

# கல்விச் சுடர்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை,
௨006 மே

வெளியீடு 01

## மாதிரி வினாப்பத்திரம்

## புவியியல் II பகுதி II

இரண்டு மணித்தியாலம் திரு. **P.S.குமரன் B.A. (Hons) யாழ்.**

### பகுதி "அ" (சூழல் மூலகங்கள்)

01) i. கீழே தரப்பட்டுள்ள படத்தில் பெயரிடப்பட்டுள்ள நாடுகளை எவ்வகையான சூறாவளிகள் பாதிக்கின்றன?
ii. நீர் (i) இல் குறிப்பிட்டவகைச் சூறாவளிகளின் தோற்றத்திற்குப் பொறுப்பான காரணிகளை விளக்குக?
iii. இவ்வகைச் சூறாவளிகளினால் ஏற்படுத்தப்படும் பாதிப்புகள் யாவை?




02) i. பள்ளத்தாக்குப் பனியாற்றின் தின்னல் செய்முறையை சுருக்கமாக விளக்குக.
ii. பள்ளத்தாக்குப் பனியாற்றின் தின்னலுடன் தொடர்பான நான்கு நிலவுருவங் களைக் குறிப்பிட்டு அவற்றின் உருவாக்கத்தை பொருத்தமான விளக்கப் படங்களின் துணையுடன் விளக்குக.

03) i. கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள கட்டளை விதிகளைச் சுருக்கமாகத் தருக.
ii. கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டில் வரண்ட காலநிலை வகைகளைப் பெயரிடுக
iii. நீர பெயரிட்ட (ii) பிரிவுகளில் எவையேனும் ஒன்றைத் தெரிந்து அக் காலநிலையின் முனைப்பான பண்புகளை விளக்குக.

04) i. உயிரினத்தொகுதி என்றால் என்ன?
ii. ஓர் உயிரினத்தொகுதிக்குள் நிலவும் சக்தி ஓட்டத்தை விவரிக்குக.
iii. ஓர் உயிரினத் தொகுதியை நிலைகுலையச் செய்யும் காரணிகளைச் சுருக்கமாக விவரிக்குக?

### பகுதி "ஆ" (சூழல் முகாமைத்துவமும் பாதுகாப்பும்)


05) i. பாலைவன மயமாதல் என்றால் என்ன ?
ii. பாலைவன மயமாதலுக்கு வழிவகுக்கும் காரணிகள் நான்கை விளக்குக.
iii. பாலைவன மயமாதலால் ஏற்படும் பாதிப்புகளை உதாரணங்களுடன் விளக்குக.

06). i. கடல் மாசடைவதற்கு வழிவகுக்கும் காரணிகள் நான்கைப் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.
ii. கடல்வள உயிரினங்கள் குறைந்து செல்வதற்கான காரணங்களைப் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.
iii. கடல்வளத்தைப் பேணிப்பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்படும் வழிமுறை களைக் சுருக்கமாக விவரிக்குக.

07) i. முருகைகற்பாறை குறைந்து செல்வதற்கு ஏதுவாய் அமையும் மனித நடவடிக்கைகளை உதாரணங்கள் தந்து விளக்குக.
ii. முருகை கற்பாறை அகழ்வதனால் ஏற்படும் பாதிப்புகளைச் சுருக்கமாக விவரிக்குக.
iii. முருகை கற்பாறைகளைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பற்றி உதாரணங்களுடன் விளக்குக.

08) 1800 - 2000 வரையான காலப்பகுதியில் வளிமண்டலத்தில் அதிகரிக்கும் காபனீரொட்சைட்டை ($Co_2$) வரிப்படம் இல. 01 காட்டுகிறது. இவ்வரிப்படத்தை அடிப்படையாகக் கொண்டு

**வளிமண்டலத்தில் $Co_2$ அதிகரிப்பு போக்கு**




i. 1800 - 2000 வரையான காலப்பகுதியில் வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் ($Co_2$) அதிகரிப்பதற்கு வழிவகுத்த பிரதான காரணிகள் யாவை ?
ii. வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் ($Co_2$) அதிகரிப்பதனால் ஏற்படும் பாதிப்புகள் யாவை?
iii. வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் ($Co_2$) குறைப்பதற்கான ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் இடையூறுகளைச் சுருக்கமாக விளக்குக.

## புவியியல் III பகுதி I

01. புவியியற்துறை பற்றிய பின்வரும் கூற்றுகளில் எக்கூற்று சரியானது.
i. கைத்தொழில் புரட்சியின் பின்னர் புவியியல் ஓர் விஞ்ஞானம் சார்ந்த இயலாக எழுச்சியுற்றது.
ii அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் அது ஒரு இயலாக ஏற்றுக்கொள்ளப் பட்டது.
iii. காலநிலையின் ஒரு கிளைப்பிரிவாகியதோடு அது வளர்ச்சியுற்றது.
iv புவியியல் இடங்களிற்கிடையேயான தொடர்புகளைக் கற்கும் ஓர் இயலாகும்

02. மானிடப் புவியியல் என்னும் பதத்தை முதன் முதல் பிரயோகித்தவர்?
i ரட்சல் ii ஹன்டிங்ரன் iii புருனே iv சோர்

03 **ஐரோப்பிய குடித்தொகை அச்சு** என்பது
i. ஐரோப்பாவில் குடித்தொகையை மிக அடர்த்தியாகக் கொண்ட வலயம்
ii. அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியக் குடித்தொகை வாழும் இடம்
iii. ஐரோப்பாவில் குடித்தொகை குறைவாகக் காணப்படும் வலயம்
iv. ஐரோப்பாவில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் வாழும் இடம

04. உலகில் சிசுமரணவீதம் அதிகமாக உள்ள நாடு ?
i. பாகிஸ்தான் ii. சோமாலியா
iii. எதியோப்பியா iv. ஆப்கானிஸ்தான்

05. கடந்த இரு ஆண்டுகளில் இலங்கையின் இடப்பெயர்வில் குடிவரவு அதிகமாக உள்ள மாவட்டங்களாவன?
i. மட்டக்களப்பு. யாழ்ப்பாணம், திருகோணமலை.
ii. முல்லைத்தீவு. வவுனியா, திருகோணமலை.
iii. முல்லைத்தீவு. யாழ்ப்பாணம், கிளிநொச்சி.
iv. கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை.

06. ஒரு நாட்டின் நகராக்கத்தின் அளவு அளவிடப்படுவது?
i. நாட்டின் குடித்தொகை வளர்ச்சி வீதத்திலிருந்து
ii. நகராக்க வளர்ச்சி வீதத்திலிருந்து
iii. மொத்தக் குடித்தொகையில் நகரக் குடித்தொகையின் வீதத்திலிருந்து
iv. கிராம - நகர இடப்பெயர்வு வீதத்திலிருந்து

07. உலகில் கூடுதலான குடித்தொகையைக் கொண்டுள்ள நான்கு நகரங்களைச் சரியாகக் குறிப்பிடுவது?
i. டோக்கியோ, பிறேசில், பிஜீங், கல்கத்தா
ii. டோக்கியோ, மெக்சிக்கோ, மும்பை, நியோர்க்
iii. பிறேசில், மெக்சிக்கோ, மும்பை, கல்கத்தா
iv. டோக்கியோ, பிறேசில், மெக்சிக்கோ, மும்பை

08. **பசெந்தா** ஏன்பது?
i. சேரிகள் அதிகமாக வாழ்கின்ற கட்டடங்களைக் கொண்ட ஒரு தொகுதி
ii. கோப்பிச் செய்கையோடு தோட்டக் கட்டடங்களைக் கொண்ட ஒரு தொகுதி
iii. நகரசேரிக் குடிகளின் மீள்குடியேற்றத்திற்கான கட்டடங்களைக் கொண்ட ஒரு தொகுதி
iv. கரும்புச் செய்கையோடு தோட்டக் கட்டடங்களைக் கொண்ட ஒரு தொகுதி

09. பண்டைய விவசாயிகளின் பயிர்ச்செய்கை முறைகள் கண்மூடித்தனமாகப் பின் பற்றப்படுவது?
i. சேனைப் பயிர்செய்கையிலும் வர்த்தக தானியப் பயிர்ச் செய்யகையிலும்
ii. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையிலும், மத்திய தரைவிவசாயத்திலும்
iii வாழ்க்கைப் பயிர்ச்செய்கையிலும், மந்தை வளர்ப்பிலும்
iv. கலப்பு வேளாண்மையிலும், மந்தை வளர்ப்பிலும்

10. ஐக்கிய அமெரிக்காவில் மோட்டார் வாகனக் கைத்தொழில் இடம்பெறும் முக்கோண நகரத்தொகுதி
i. லான்சிங், டிட்ரோயிட், பிளின்ற் ii. லான்சிங், நியூயோர்க், வாஸிங்டன்
iii. டிட்ரோயிட், கன்சாஸ்ஸ், புறோவிடன்ஸ்
iv. கிளீவ்லான்ட், பிளின்ட், டிட்ரோயிட்

11. விலங்குக் கைத்தொழிலில் சற்று முன்னேறிய நிலையைக் கொண்டிருப்பது
i.கால்நடைப் பண்ணை ii. நாடோடி மந்தை வளர்ப்பு
iii.கலப்பு வேளாண்மை iv. இறைச்சிக்கான மந்தைகளை இடமாற்றுதல்.

(புவியியல் பகுதி III இல் பகுதி I இன் தொடர்ச்சி 11.04.2006 ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)

## *விடைக் குறிப்புகள்*

## இந்து நாகரிகம்

திரு. ப.ஜோதிஸ்வரன் *B.A., Dip. in Edu.* யாழ்.

வெளியீடு 01

(இந்து நாகரிகத்தின் பகுதி II இன் விடைக்குறிப்புகள் 28.03.2006 ஆம் திகதி வெளியாகியிருந்தன. அவற்றின் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகின்றது.)

* திருமுறைகள் - பிரபந்தங்கள் நெறிமுறையில் ஓதுதல்.

ஆ) ★ சிந்துவெளி தொல்பொருள்கள்
★ குப்தர் கால நாணயங்கள்
★ பல்லவர் கால, சோழர்கால சாசனங்கள்
★ தெய்வப்படிமங்களும் இசைக்கருவிகளும்
★ சிற்பங்கள் - ஓவியங்களில் இசை (20 புள்ளிகள்)

07. அ) பிரதிமா லட்சண அமைப்பை விளக்குதல்
ஆ) ஐந்தொழில், பிரபஞ்ச அசைவு, பஞ்சாட்சர தத்துவங்களை விளக்குதல்
இ) கோயில்களில் முக்கியத்துவம், சிறப்புக்கள் பாடல் எடுத்துக்காட்டு
உதாரணம் - குனித்த புருவமும் கொவ்வைச்......... (20 புள்ளிகள்)

08. ★ ஆரம்ப நிலைகளில் காணப்பட்ட வேற்றுமைத் தன்மைகளை எடுத்துக் காட்டல்.
(உதாரணம் - ஈஸ்வர வாதம் - நிரீஸ்வர வாதம்
ஆத்ம வாதம் - அனாத்ம வாதம்
முத்தி - பரிபூரண நிர்வாண நிலை
வாழ்வு - துறவு
★ பிற்காலத்தில் ஒற்றுமைத் தன்மைகளை விளக்குதல் ......... (20 புள்ளிகள்)

09. ★ பிரமச்சாரிய நிலை....
★ கிருகஸ்த நிலை.....
★ வானப்பிரஸ்த நிலை.....
★ சந்நியாச நிலை.......
★ இன்றைய நிலையில் ஆச்சிரமங்கள் பற்றிய குறிப்புகள்

10. அ) ★ அரசியல், பொருளாதார விடையங்களைக் கூறுவது
★ ஆசிரியர் - கௌடிலியர்
★ 15 பகுதிகள், 150 அதிகாரங்கள்
★ காமாண்டக நீதிசாரம் இதன் சுருக்கம்
★ பொருள் முதல்வாத அடிப்படையில் அரசியலை விளக்குவது
★ அரசியல் அங்கங்களைக் கூறுவது.

(இந்து நாகரிகம் பகுதி I இல் பகுதி II இன் தொடர்ச்சி 07.04.2006 ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)